Registered as a News Paper பக்கங்கள் 10 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 24 (08-01-1993) வெள்ளிக்கிழமை ஓசை 325

### பல்கலைக்கழகத் தெரிவில் பெண்கள் முன்னணியில்

பல்கலைக்கழக அனுமதிக்கு இந்த ஆண்டு ஆண்களை விடப் பெண்கள் அதிகம் பேர் தகுதி பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. 59,937 பரீட்சார்த்திகள் இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள். இது சென்ற வருடங்களை விட அதிகமாகும். பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 47.7 (10 ஆம் பக்கம் பார்க்க)

## [ கிளாலி படகுப் படுகொலை ]

# அழுகிய நிலையில் 11 சடலங்கள்

# கொலையானோர்தொகைஅதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட படகுப் பயணிகளின் மேலும் பதினொரு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. பூநகரி - நல்லூர் கடற்கரையில் கரை ஒதுங்கிய இச் சடலங்கள் இனங்காண முடியாத அளவிற்கு அழுகிய நிலையில் இருந்தமை காரணமாக அப்பகுதியிலேயே புதைக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பூநகரி - நல்லூர் கடற்கரையிலநேற்று மூன்தினம் மேற்படி சடலங்கள் கடல் நீரினால் அடித்துவரப்பட்டு கரையோரமாகக் காணப்பட்டன. ''மனித சடலம்'' என்பதை மட்டும் உறுதிசெய்யக் கூடிய நிலையில் காணப்பட்ட இச் சடலங்களை ஆண, பெண் என்றோ அல்லது அங்கஅடையாளங்களைக்கொண்டோ இனம் காண முடியாத அளவுக்கு உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதாக அங்கிருந்து எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச் சடலங்களை அப்பகுதியில் இருந்து வேறு இடத்துக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையில் காணப்பட்டதால் அனைத்துச் சடலங்களும் சேகரிக்கப்பட்டு அங்கேயே அடக்கம் செய்யப்பட்டன.

இச் சடலங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை நேற்று நள்ளிரவுவரை பெற் (9 ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் தத்தளித்த எம்மை உறவினர் காப்பாற்றினர்

### கடற்படையின் தாக்குதலில் சிக்கிய மீனவர் தெரிவிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை வல்வெட்டித்துறை கடற்பிராந்தியத்தில் மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலின்போது இரண்டு மீனவர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இரண்டு மணிக்கு வடமராட்சி கடற்பிராந்தியத்தில் நடைபெற்றது.

இதுபற்றி மயிரிழையில் தப்பி வந்த மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து முனைப்பகுதியில் வசித்துவரும் நடராசா தேவலிங்கம் (வயது 43) தெரிவிக்கும் போது தன்னுடன் நண்பன் அருமை (வயது28) என்பவருடன் கடலுக்கு அதிகாலை சென்ற வேளையில் மூன்று விசைப் படகுகளில் கடற்படையினர் கடலில் தரித்து நின்றதாகவும் இருளாக இருந்ததால் தமது கண்ணுக்கு கடற்படையினரை தெரியவில்லை என்றார்.

''நாங்கள் உயரச் சென்ற போது திடீரென துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தவாறு கடற்படையினர் எம்மை நெருங்கியபோது நாங்கள் கடலில் குதித்து எமதுபடகின் கீழ் மறைந்துகொண்டோம். கடற்படையினரின் துப்பாக்கிச் சூட் [9 ஆம் பக்கம் பார்க்க]

## போராட அணி திரளுமாறு வெகுஜன அமைப்புகள் அழைப்பு

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதார தடைகளைக் கண்டித்து எதிர்வரும் திங்கட்கிழமை நடாத்தப்படவிருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ள திரண்டுவருமாறு பல்வேறு வெகுஜன அமைப்புக்களும் தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

கூட்டுறவுச் சங்க களஞ்சியங்கள் போதிய உணவுப் பொருள்கள் இன்றி வெறிச்சோடிப் போயுள்ளன. பட்டினியால் வாடும் மக்களை விமானங்கள் மூலம் குண்டுமாரி பொழிந்து கொலை செய்யும் அரக்கத்தனமான செயல், மக்களை வாட்டி வதைக்கும் பொருளாதாரதடை என்பவற்றைக் கண்டித்து நடைபெறும் பேரணியில் சகல கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள், பாவனையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கூட்டுறவு ஊழியர் (9 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுபடை முப்படை தலைமை சம அந்தஸ்து உடையதாக்குக

### அரசசார்பு அரசியல்வாதிகள் சிபார்சு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து பெருமளவில் தப்பியோடுவதனால் ஏற்பட்டுள்ள தளர்வு ஆபத்தான நிலைமையை உருவாக்கியிருப்பதோடு தளத்தில் ஏற்படும் இழப்புகளாலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு, ''சண்டையுமில்லை, சமாதானமுமில்லை சிறிலங்கா எங்கேபோகிறது?'' என்ற கட்டுரையில் ரைம்ஸ் அரசியல் நிருபர் எழுதியுள்ளார்.

இந்நிலை மேலும் தொடருமாயின் அது அரசுக்கே பாதிப்புகளை ஏற்படுத்தும் என்ற உண்மையை உணர்ந்த இரு பலம் வாய்ந்த அரசு தரப்பு அரசியல் வாதிகள் இராணுவ (9 ஆம் பக்கம் பார்க்க)

## அங்கிலிக்கன் ஆயர் கிளாலியூடாக வருகை

அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதிவண ஜோர்ஜ் கென்னத் பெர்னாண்டோ நேற்று நள்ளிரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இவர் நேற்றிரவு படகு மூலம் கிளாலியூடாக வந்து சேர்ந்தார்.

இவருடன் வண. நியால்சிடுலிப் சிகாவும் யாழ். வருகை தந்துள்ளார்.

இவர் விடுதலை புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்து பேசுவார் எனவும் அத்துடன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அங்கிலிக்கன் ஆயருக்கு இராணுவம் எச்சரிக்கை

### கிளாலிக் கடலைக் கடக்க வேண்டாம்

(கொழும்பு)

அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் யாழ்ப்பாணம் வாவியைக் கடந்தால் அவர் மீது கடற்படையினர் நடவடிக்கை எடுப்பர் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு அவர் கடந்து செல்ல முயற்சித்தால் அவரது படகு மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தலாம் எனவும் ராணுவத்தரப்பு எச்சரிக்கை செய்துள்ளது.

இதேவேளை கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கிளிநொச்சிக்கு சென்று ஆலங்கேணி கடற்கரைக்கு சென்றிருக்கக்கூடும் என்றும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை தேர்தல்கள் ஜூலையில் நடைபெறும்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

எதிர்வரும் ஜூலை மாதத்தில் மாகாணசபைத் தேர்தல்களை நடாத்துவது எனவும், அதற்காக மே மாதம் 19 ஆம் திகதி முதல் வேட்புமனுக்கள் கோரப்படவுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா தெரிவித்தார்.

மேலும் சப்பிரகமுவா, வடமேல் மாகாணங்களுக்கான தேர்தல்கள் ஜூலையிலும் வடமத்திய மாகாணத்தேர்தல் ஆகஸ்டிலும் ஊவா, மேல் மாகாணங்களுக்கான தேர்தல் செப்டெம்பரிலும் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பகலில் 'சுப்பர் சொனிக்' இரவில் ஆட்லறி பீரங்கிகள்

நேற்று முன் தினம் பகல் சுப்பர்சொனிகவிமானத்தின் தாக்குதல் பீதி அடங்குமுன் இரவு அப்பகுதிகளை நோக்கி சரமாரியான எறிகணைத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுமுன்தினம்காலை சித்தன்கேணிப் பகுதியை அண்டி சுப்பர்சொனிக் விமானம் றொக்கற் தாக்குதல்களை நடாத்திச்சென்றதும் இரவு 7 மணியளவில் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து இருபத்தைந்திற்கும் மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டன. (9 ஆம் பக்கம் பார்க்க)

## சடலத்திலிருந்த மோதிரம் மாயமாக மறைவு

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணியிலநேற்றுமுன்தினம் 'சுப்பர் சொனிக்' விமானம் நடத்திய குண்டு வீச்சில் கொல்லப்பட்ட கே. ப்ரேமதாஸ் [வயது 20] என்பவரிடம் இருந்த மோதிரமும் பணப்பையும் மாயமாக மறைந்துள்ளது

உறவினர்கள் இது தொடர் பாகஆஸ்பத்திரியில் விசாரித்த போது தங்களுக்கு எதுவும் தெரியாதென தெரிவிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அப்பொருள்கள் அவரது உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் வரை வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### ஒலிவ் ஸ்நானப் பவுடர்

இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு. இயற்கை வாழ்வுக்கு எண்ணெய் முழுக்கு அவசியம். சிகைக்காய் எலுமிச்சங்கோது. பயறு வெந்தயம் மற்றும்மூலிகைவகை கொண்டு தயாரான ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவித்துச் சுகம் காணுங்கள். அண்ணா கோப்பிகடைகளிலும் விற்பனையாகின்றது.

- மில்க்வைற் (சி/5717)

### தவற விடப்பட்டது

கண்ணையா இராமையா ஆகிய நான் 2-01-93 இல் கிளாலியில் வைத்து எனது 53 748 2180 X இல அறிமுக அட்டையையும் வுனியாவுக்கு அப்பால் செல்வதற்கான 'பாஸ்' அனுமதிச்சீட்டையும் தவறவிட்டுவிட்டேன் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள குகன் ஸ்ரோரில் ஒப்படைக்கவும், தகுந்தசன்மானம் வழங்கப்படும். (3244)

### சோதிடம்

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, குழந்தைகளுக்கும், உங்களுக்கும் அதிர்ஷ்ட எண்களின் பெயர்வைக்க வேலணை சோதிடர் V. A. சிவராசா 152B, அரசடி றோட், கந்தர்மடம். யாழ்ப்பாணம். (3955)

### வியாபாரிகட்கு

உள்நாட்டு வெளிநாட்டு அழகு சாதன பொருள்களும், லேஸ், தையல் பொருள்கள், எவர் சில்வர், ஸ்கூல் ரவலிங், கான்பாக், இமிரேசன் கவரிங் நகைகள் விளையாட்டுப்பொருள்கள் மொத்தமாக பெற்றுக்கொள்ள, ஜெயா அழகு சாதன மாளிகை 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3954)

### திருமண சேவை

பொருத்தமான மணமகள் மணமகன் தேடுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், சந்திப்பு ஞாயிறு காலை. (3953)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5679)

### மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல தினிசுகளில் விற்பனைக்குண்டு வர்ணக் கலர்களில் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். படங்கள் தனியாகவும், சிலிப் தனியாகவும். ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை 330, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். (3921)

### சித்திரம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சித்திரம் கற்போருக்கும், வட-இலங்கை நுண்கலை மன்றப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் உதவும் சித்திரம் வினா—விடை விற்பனையாகிறது. ஆக்கம்: த. சிவயோகலிங்கம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3918)

### வெளிவந்துவிட்டது

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு உதவும் தமிழ் ஆண்டு 5 செயல் நூல் வெளிவந்து விட்டது. விரிவான விளக்கங்கள், பயிற்சிகள் கொண்டது. ஆக்கம் த. துரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3917)

## வட இலங்கை சங்கீத சபை ஏப்ரலில் பரீட்சைகள்

வட இலங்கை சங்கீதசபை பரீட்சைகள் 1993-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும் எனவும் இந் நாட்களில் வரும் பாடசாலை விடுமுறை நாட்களில் செயன்முறைத் தேர்வும், மேமாதம் இரண்டாம்கிழமை வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் எழுத்துப் தேர்வும் நடாத்தப்படும் என வட பிராந்திய கல்விப்பணிப்பாளரும் சபைத் தலைவருமாகிய திரு.இ. சுந்தரலிங்கம்அவர்கள் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் 29-01-93-ம் திகதி வெள்ளிக்கிழமைவரை ஏற்றுக்கொள்ளப்படும். பிந்திய விண்ணப்பங்கள் ஏற்கும் திகதி 05-02 93 வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலும் காகிதாதிகளின் விலை அதிகரிப்புக்காரணமாக பரீட்சைக் கட்டணம் இம்முறை உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். [17]

### சைவவித்தியா விருத்திச் சங்கம்

## பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

17-01-1993 க்கு முன் சுயவிபரங்களைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு விரும்புவோர் பதிவுத்தபாலில் விண்ணப்பிக்கவும்:

கௌரவ செயலாளர்,
சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(சி-5725)

### அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு நடாத்தும்

## ஓவியப் போட்டி

இவ்வருடம் 1993-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப்பெண்கள் நாளையொட்டி ஓவியப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் ஓவியக் கலைஞர்களையும், ஓவியக் கலையில் ஆர்வமுள்ள ஏனைய தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக்கொள்கிறது

**போட்டியாளர்களுக்கான ஒழுங்கு விதிகள்**

1. பெண்கள் எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து பெண்கள் மீதான சமூகத்தின் அடக்குமுறைகள் அழுத்தங்கள், இந்நிலையில் பெண்களின் மனவுணர்வுகள், குமுறல்கள் ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமையவேண்டும். அதாவதுஇந்த ஓவியங்களுக்கூடாக சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக அமையவேண்டும்.
2. சிங்கள இனவாத அரச அடக்குமுறை காரணமாக தமிழீழப் பெண்களின் யதார்த்த நிலையைப் பிரதிபலிப்பதாக, எமது மக்களின் தேசியப் பிரச்சினையை வெளிக்கொண்டுவருவதாக, எழுச்சியூட்டுவதாகஅமையவேண்டும்.

**ஏனைய விதிகள்**

1. ஓவியங்கள் 28''X22'' (பிறிஸ்ரல்போட் அளவில்) அளவுடையதாக இருக்கவேண்டும்
2. வர்ண சாதனங்களாகப் பின்வரும் எந்த ஊடகங்களையும் பயன்படுத்தலாம்.
   நீல வர்ணம், மெழுகுச் சோக் வர்ணம், போஸ்ரர்வர்ணம், கலப்புச் சாதனம், ஒட்டுச் சித்திரம், எண்ணெய் வர்ணம்.
3. போட்டியாளர் ஒவ்வொருவரும் ஆகக் கூடியது மூன்று படங்களையே போட்டிக்காக அனுப்ப முடியும்.
4. ஓவியத்தினுள்ளே தேவையற்ற எந்த எழுத்துக்களும் இடம்பெறக் கூடாது. பெயர், முகவரி, பாடசாலை விபரம், உறுதிப்படுத்தல் போன்றவற்றை ஓவியத்தாளின் பின்புறத்தில் இடவும்.
5. போட்டிக்கான ஓவியங்கள் யாவும் 1993 02-20 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பிந்தியதாக வந்து சேரும் ஓவியங்கள் போட்டிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.
6. உங்கள் ஆக்கங்களை உங்களுக்கு அண்மையிலுள்ள விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அரசியல் துறைச் செயலகங்களில் சேர்ப்பிக்கவும்.
7. தகுதி வாய்ந்த நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

**மாணவர்களுக்கான சிறப்பு விதிகள்**

மேற் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கமைவதோடு ஒவ்வொரு மாணவரும் போட்டிக்காக அனுப்பப்படுகின்ற ஓவியம் தனது சொந்தப் படைப்புத்தான் என்பதை அதிபர்கள் அல்லது வகுப்பாசிரியர்களின் ஒப்பம் இடுவித்து உறுதிப்படுத்த வேண்டும். (இவ்வாறு உறுதிப்படுத்துவதை ஓவியத் தாளின் பின் பக்கத்தில் செய்யவும்

மாணவர்களுக்கான போட்டிகள் கீழ்ப்பிரிவு மத்திய பிரிவு, மேற்பிரிவு எனத் தனித் தனிப் பிரிவுகளாக நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

[சி-5731]

### அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு நடாத்தும்

## இலக்கியப் போட்டி

1993-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு இலக்கியப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது. எழுத்தார்வம்மிக்க அனைவரும் வயது வேறுபாடின்றி இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம் இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

1) கவிதை
2) சிறுகதை

இப்போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புக்கள் பெண் விடுதலையை முன்னெடுக்கும் நோக்கில் அமையவேண்டும் காலங்காலமாகப் பெண்ணினத்தின்மீது திணிக்கப்படும். சமூக அடக்குமுறை வடிவங்களால் மட்டுமல்லாது ஆக்கிரமிப்பு அரசின் ஒடுக்குமுறைகளாலும் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழீழப் பெண்களின் அவல நிலைகளையும். உள்ளக் கிடக்கைகளையும் வெளிக்காட்டும் விதத்தில் படைப்புக்கள் படைக்கப்பட வேண்டும்.

எமக்கு அனுப்பப்படும் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில்மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ, தட்டச்சில் பொறிக்கப்பட்டோ. ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கியப்போட்டி' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டஒவ்வொருவிடயத்திலும்தரமான முதல் மூன்று படைப்புக்களுக்கும் பரிசு வழங்கப்படும் பிரசுரிக்கத் தகுதியானவை விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ வெளியீடான 'சுதந்திரப் பறவைகள்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பும்போது. அனுப்புபவர் தனது பெயர், வயது, முகவரி என்பவற்றைத் தனியே ஒரு தாளில் எழுதி படைப்புக்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது படைப்புக்களை 1993-02-10 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக, உங்களுக்கு அண்மையிலுள்ள விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அரசியல் துறைச் செயலகங்களில் சேர்ப்பிக்கவும்.

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

(சி-5732)

## நினைவு கூருகின்றோம் 1993-1 08

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

பாபு (ராசநாயகம் பாலகிருஷ்ணராசா - அரசத்தோட்டம், சம்பந்தர் கடையடி, கரவெட்டி மத்தி - யாழ்ப்பாணம்)

வின்சன் [சுப்பிரமணியம் வைகுந்தவாசன் - நெல்லண்டை, தம்பளை, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்]

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பெரியவிளான் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ரமேஷ் [இராசையா சுதாகரன் - சிறுவிளான், இளவாலை - யாழ்ப்பாணம்]

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி – இராமநாதபுரம், பழைய கண்டிவீதியில் இந்தியப் படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியிற் சிக்கியதில் கொல்லப்பட்ட 2 தமிழ் வயோதிபர்கள்.

1992 ஆம் ஆண்டு மன்னார் . கள்ளாற்றுக்கும். வெள்ளாச்சி வீதிக்குமிடையே தம்பனையாற்றுப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

வேலன் / விக்கா [அந்தோனி தயானந்தம் - 30-ம் வீட்டுத் திட்டம், கருவேப்பங்கேணி, வந்தாறுமூலை - மட்டக்களப்பு]

மட்டக்களப்பு - திமிலைவெட்டைப் பகுதியில் பாம்பு கடித்ததில் எமைப் பிரிந்த -

விக்கி / சிறிப்பிரயா [அருணாசலம் கந்தசாமி- வந்தாறுமூலை - மட்டக்களப்பு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5732]

யாழ்ப்பாணம்




பெயருக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர்களில் செங்கோலும் இணைந்து கொண்டான் நட்பிலும் இவன் செங்கோல் தவறியதில்லை. கடமையில், கட்டுப்பாட்டில், மனித நேயத்தில், தமிழர் பண்பாட்டில் நடுநிலை தவறாது 'செங்கோல்' என்றதனது பெயரைக் காப்பாற்றிய ஒரு காவியம் இன்றுஎங்களுடன் இல்லை.

மணலாற்றின் கள வரலாற்றில் இவனது நிதிப் பணியை நினைத்துப் பார்க்கிறேன்..... நிதிப் பொறுப்பாளனாய், தோளில் பணப்பையைத் தொங்க விட்டபடி ஓடி ஓடிக் கடமையைச் சரிவரச் செய்த நாட்கள் தான் எத்தனை. நிதியிருக்குமிடத்தில் நீதியிருப்பதில்லை. நீதி இருக்குமிடத்தில் நிதி இருப்பதில்லை ஆனால் செங்கோலிடம் நிதியும் நீதியும் இணைந்திருந்தன.

செங்கோலுக்கு என்றும்கண்கள் இரத்தம்போல் சிவந்திருக்கும். அவன் கண்கள் ஏன் சிவந்து கிடந்தன என்பதை இப்போதுதான் சிந்தித்துப் பார்க்கிறேன். தூங்குவதற்கு இவனுக்கு நேரம் கிடைத்ததில்லை. நாம் படுக்கும்போது விளக்கும் கணக்குமாய் இருப்பதைப் பார்க்கிறோம். விழிக்கும் போதும் அதேமேசையில் ...அதே இருக்கையில்...அவன் எப்போது தூங்குகின்றானென்பதை இறுதிவரை என்னால் கண்டுபிடிக் முடிந்ததில்லை.


'கப்டன் சங்கிலி' ஓயாமல் வாகனமோட்டித் தியாகியாகிப் போனவனின் பெயர்தாங்கிய லொறிவண்டி. செங்கோலைத் தவிர மற்றவர்கள் அதனைஓடுவது கடினமானது. சிங்கள அரசின் பொருளாதாரத் தடையை உணர்ந்து'எங்கள் போராட்டத்தைவளர்க்க வேண்டுமென ஓடிய லொறிவண்டி அது. மணலாற்றுச்சண்டைக் களங்களுக்கெல்லாம் அந்த லொறிவண்டியில் தான் பொருள்களை ஏற்றி இறக்குவான்செங்கோல். பணத்தை அளவோடு செலவிட வேண்டுமென்பதற்காக தானே சென்று கொள்வனவு செய்யும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான். இயக்கத்தின் வளர்ச்சியை நெருக்கடியான காலத்தில் எவ்வாறு எடுத்துச் செல்ல வேண்டுமென்பதைச் சரியாகப் புரிந்து நிதிப்பணி புரிந்தான். சிலநாட்களாகஓடுவாரற்று நிற்கும் 'கப்டன்-சங்கிலி' லொறிவண்டியைப் பார்க்கும்போது நெஞ்சில் வேதனைமுட்டிக்கொள்கிறது.

மணலாறில் நடக்கும் ஒவ்வொரு சண்டையிலும் களைப்புடன். பசியுடன் இருக்கும்எம் வீரர்கள், ''செங்கோலண்ணனுடைய இடத்திற்குப் போய் வருவம் மச்சான்'' என்று கூறிக்கொண்டு ஓடி வருவார்கள் செங்கோல்ஏதாவதுநல்ல சாப்பாட்டுப் பொருள்களைக் குறைவின்றி வாங்கி வைத்திருப்பான். வயிறார, ஆசைதீர தன் தோழர்கள்சாப்பிடும் போது தனக்குள்மகிழ்வையும், நிறைவினையும் கண்டுகொண்டான். இன்றோ நாளையோ மண்ணுக்காய் உதிரப் போகும் அவர்களை மகிழ வைப்பதையே தன் மகிழ்வாகக் கருதியவன் கண்மூடிக் கிடந்தபோது அவன்முன்னே பேசுவதற்கு வார்த்தைகளின்றித் தலை குனிந்து நின்ற வீரர்களை நினைத்துப்பார்க்கும்போது...

செங்கோல் மக்களுடன் கொண்டிருந்த உறவு வித்தியாசமானது.அவன்யாருடைய வீட்டிற்கும் சென்றது கிடையாது. அப்படிச் செல்வதை அவன் விரும்பியதில்லை.விரும்பினாலும் நேரம்கிடைத்ததில்லை ஆனால் செங்கோலைத் தெரியாதவர்களில்லை. அவன் மீது பற்றும் பாசமும் வைக்காதவர்களில்லை மக்கள் மனம் நோகாமல் பேசிக் காரியத்தை சாதுரியமாக முடித்துக்கொள்வான். செங்கோலின் வீரஉடல் கல்லறைக்குச் செல்லும்போது மக்கள் வாய்விட்டு அழுத போதுநான்வியப்படைந்தேன். மரணத்தில்தான், மக்கள் அவன்மீது கொண்ட ஆழமான நேசத்தை அறிய முடிந்தது.

செங்கோல்புரிந்துணர்வுள்ள போராளி; அன்று ஊரியான் பாதையில் சேற்றில் கால் புதைய, சாரத்தை உயர்த்திச் சண்டிக்கட்டுக்கட்டிக்கொண்டு முக்கியமான பொருள்களைச் சுமந்து, சுமந்தே கரைசேர்த்ததை நினைத்துப்பார்க்கிறேன்... சாவிற்கு முன் இவன் கிளாலிப் பாதையில் அனுபவித்த துன்பங்கள் ...

கொடுத்த வேலை எதுவாக இருந்தாலும் சொல்லிலோ, செயலிலோ தளர்வு காட்டாதவன். அன்பான ஆனால் அளவான பேச்சு. அளவுக்கு மிஞ்சினால் கோபத்தில் கண்கள் சிவந்து விடும். உயர்ந்த தோற்றமும், சிவந்த கண்களும், அளவான அமைதியான பேச்சும் இவன் மீது மற்றவர்க்கு அச்சத்தை உண்டாக்கும். பழகி உள்ளம்புரிந்தோர்க்கு மரியாதையும்,அன்பும் கொண்ட இவனின் தந்தை கூட ஒரு விசித்திரமானபிறவி.



## மேஜர் செங்கோல்

1988 இல் தமிழீழ விடுதலைப் போருக்குக் கொள்ளி செருக முற்பட்ட தேச விரோதக் கும்பல்கள்,செங்கோலின் அண்ணனை பளையில் வைத்துக் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றனர். மகனை வெட்டிக் கொன்ற செயல் பொன்னுத்துரையின் இருதயத்தை வெடிக்கச் செய்தது. அந்த நாள் தான் செங்கோலின் விடுதலை வாழ்வுக்கு வழியமைக்கிறது. பொன்னுத்துரை த்ன்மகனைத் தானே களத்துக்கு அனுப்பிவைக்கின்றார்.

மணலாற்றுக் காட்டில் பயிற்சி முடித்த செங்கோலின் திறமை அளவிடப்பட்டது. அதனால் பயிற்சி ஆசிரியனாக நியமிக்கப்பட்டான். தொடர்ச்சியாக மூன்று பயிற்சிப்பாசறைகளை நிறைவாக முடித்தான். கடமை வீரனாய் நின்ற செங்கோல், பொறுப்பாளர்களின் கருத்தில் நிறைந்தான். அதன் விளைவு அவனின் வளர்ச்சிப் படியானது நிதிப்பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. சிக்கலும், பொறுப்பு மிக்க இந்தப் பணியில் செங்கோலின் கோல் தளம்பலின்றி நின்றது.

செங்கோலின் நிதானமான வளர்ச்சி முல்லைத்தீவுக் கோட்டத்தின் சிறப்புப் பொறுப்பாளராக அவனை உயர்த்தியது. பொறுப்பேற்று இரண்டு வாரமிருக்கும் எங்காவது பெருமளவில் இராணுவத்தைக் கொல்ல வேண்டும் ஆயுதங்களைஅள்ள வேண்டும் என்ற உணர்வு தலையெடுத்து நின்றது சாதனை மிக்கவீர வரலாறு எழுதப்படுவதற்கான நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. இந்த நாளில் அவனது தந்தையின்உணர்வுகளை அசைபோட்டுப் பார்க்கிறேன்.

செங்கோலின் பிறந்த மண் இயக்கச்சிக் கிராமம். இன்று சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குள் விழுங்கப்பட்டுக் கிடக்கின்றது. பளையினை அண்டிய பகுதியில் அவனது தாய் தந்தையர் வாழ்கின்றனர். அண்மையில் யாழ்ப்பாணம் சென்று வந்தபோது அவனது தந்தையைக் கண்டு கதைத்தேன்.

''செங்கோல் முன்பு போல இனி இங்கே வரமாட்டான்; அவனுக்குப் பொறுப்பு அதிகரிச்சிருக்குது'' என்று கூறிய போது, அவன் இஞ்ச வர வேண்டாம் தம்பி; அவன் விடுகின்ற பிழையளை வந்து நீங்கள் சொல்லுங்கோ. நான் வாற போது ''அவனிடம் சொல்லி அவனைத் திருத்த உதவியாக இருக்கும்'' என்று சொன்னார். மீண்டும் அவரிடம் செல்லும் முன் ......... பிழைவிட்டால் தானே அவரிடம் சொல்ல வேண்டும். பிழையற்ற அவன் வீரத்தைச் சொல்ல விரைந்த போது .....

செங்கோலின் தாய் சாதாரணமானவளல்ல, தியாகத்தின்இருப்பிடம். செங்கோலின் வீரச்சாவை எப்படித் தெரிவிப்பது என்ற தயக்கத்தோடு வீட்டு வாசலுக்குள் நுழையும் போதே...... ''தம்பி! என்ரை பிள்ளையின்ரை வீரத்தை நான் அறிந்து விட்டேன் என்ர பிள்ளை இயக்கத்துக்கு செய்ததை விட என்ரை பிள்ளைக்கு இயக்கம் அதிகமாய் செய்திட்டுது'' என்று கூறி நின்ற அவனது வீரத்தாயை நினைக்கின்றேன்.........

செங்கோல் தன் வீர அத்தியாயத்தின் முடிவுவரிகளை எழுதிக் கொண்ட நாளை நினைத்துப் பார்க்கின்றேன். தாக்குதலுக்கான வியூகங்கள் வகுக்கப்பட்டிருந்தன. நாடியில் கை ஊன்றியபடி இருந்தான் செங்கோல். ''என்ன மச்சான் யோசிக்கிறாய்; உன்ரை பெடியளுக்குத் தாக்கும் முறைகளைப் பற்றிச் சொல்லிக்கொடுத்துக்கொண்டிரு'' என்றுசொல்லியபோது சிரித்தவாறே எழுந்து சென்றான். அன்றிரவு முழுவதும் செங்கோல் தூங்கவில்லை. நிலைகளைச் சரி பார்ப்பதும் புத்திமதிகள் கூறுவதுமாய் இருந்தான்.

1992ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 24ஆம் நாள் சூரியனின்பகல் கொடுமை தணிந்து கொண்டிருந்தது. 4.30 மணியிருக்கும் இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர். இன்னும் சில நிமிடங்களில் செங்கோலின் அணி தாக்குதலைத் தொடங்கும் அபாய அமைதி. செங்கோலின் குரல் வோக்கி டோக்கியில் ஒலித்துக் கொண்டிருந்தது. சில கணங்கள்......சண்டை தொடங்கிவிட்டது.கம்பீரமாக ஒலித்துக்கொண்டிருந்த செங்கோலின் குரல்?...நின்று விட்டது. நாற்பதுக்கும் மேற்பட்டஇராணுவத்தைக் கொன்று ஆயுதங்களை அள்ளிய வீர இறுமாப்புடன் கண்மூடிக்கிடந்தான் செங்கோல். செங்கோல்சரிந்து விட்டது......

செங்கோலுக்காய் எழுத என் பேனாவுக்கு வல்லமையில்லை அது நின்று கொள்கிறது.மைமுடிந்ததாலல்ல; மீண்டும் மீண்டும் என் சிந்தனை கனப்பதால்... எழுத்துக்கள் நனைகின்றன. மழையாலல்ல; பொங்கிய கண்ணீரால்...

- பாண்டியன்

## வான்முகிலே! அழுவது ஏன்?

வான் முகிலே ஏன் அழுதாய்! ஈழ மண்ணின்
இளமைந்தர் படுந்துயரைக் கண்டு நொந்தா?
நான் என்ற அகந்தையினைக் கொண்ட மாற்றான்
நாள் தோறும் குண்டுமழை பொழிதல் கண்டா?
மீன் மிதந்த ஏரியிலே! எங்கள் நாட்டு
மீனவரின் உடலங்கள் மிதத்தல் கண்டா?
தேன் விஞ்சி சுவைத் தமிழன் சோகம் கண்டா?
சிந்துகிறாய் வான்முகிலே சேதி சொல்லாய்

செந்தமிழர் ஈழத்தின் திருவை எல்லாம்
தீயிட்டார்! திருடியவர் பறித்துச் சென்றார்
வெந்த புண்ணில் மென்மேலும் வேலைப் பாய்ச்சி
வேதனையைத் தரும் வெறியர் செயலைக் கண்டா?
சந்தமிகு தமிழீழ மண்ணை மீட்கச்
சந்தனமாய்த் தேய்கின்ற மாவீரர் தம்
விந்தைமிகு தற்கொடையால் மனசு நொந்தா?
விண்முகிலே அழுகின்றாய்? விளக்கம் சொல்லாய்

அகதிகளாய் மக்களினைத் தெரிவில் விட்டும்
அழித்தொழிக்கும் நோக்கினிலே அவரைச் சுட்டும்
தகவுடைய தாய்க்குலத்தின் உடலைத் தீண்டி
தமதிச்சை வெறிதணிக்கும் கொடுமை கண்டும்
பகலிரவு பாராது ''செல்லை'' ஏவி
பலியெடுத்து அமைதியினைச் சீர் குலைத்தும்
நகை, தாலி அறுத்தெடுத்து நாசம் பண்ணும்
நரகநிலை கண்டே தான் அழுகின்றாயோ?

தடைபோட்டுத் தடைபோட்டு எழுச்சி கொண்ட
தமிழீழ மக்களினை அடக்கவென்று
மடையர் குலம் கண்ட கனா அனைத்தும் இன்று
மண்ணாகிப்போன நிலை உணர்ந்து கொண்டார்
படைவலிமை கொண்டெம்மைப் பணிய வைக்கப்
பார்த்தவனெம் மன வலிமை கண்டு வேர்த்து
குடைகின்ற எண்ணங்கள் நெஞ்சைத் தாக்கக்
குழம்புகிறான் எதிரி, நாம் அழவே மாட்டோம்!

— நிலா தமிழின்தாசன்

## அறிந்து கொள்ளுங்கள்

★ மின்னைப் பிறப்பாக்கும் முதலாவது விசையானது எப்போது எங்கே அமைக்கப்பட்டது
— இங்கிலாந்து நாட்டின் டெவ்ட்வேர்ட்டில் 1882 ஆம் ஆண்டில்

★ சூரியனின் விட்டம் யாது?
— ஒரு மில்லியன் 444,000 கி. மீ.

★ சந்திரனின் விட்டம் எவ்வளவு?
— 3476 கி. மீ.

★ சூரியன் புவியிலிருந்து எத்தனை கி. மீ. தூரத்தில் உள்ளது?
— 15 மில்லியன் கி. மீ.

★ சந்திரன் புவியிலிருந்து எத்தனை கி. மீற்றர் தூரத்தில் உள்ளது?
— 38440 கி. மீற்றர்

சிறுகதை

# உறுதி

## பொன் பாலகுமார்

அந்த அமைதியான அதிகாலைப்பொழுதைபலாலி இராணுவமுகாமிலிருந்து நிமிடத்திற்கொன்றாய் புறப்பட்டு வான் வெளியில் ''பட் பட் படீர்'' ஓசையுடன் வெடித்து கண்மூடி முழிக்குமுன்மண்ணில் பாரிய ஓசையுடன் சிதறும் ஆட்லறிகள் கதிகலங்கச் செய்கிறது.

தூரத்தே முருகன் கோயில் மணியோசை அதிகாலை நான்குமணி என்பதை அப்பிரதேச மக்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறது. தூரத்தே அங்கொன்றுமிங்கொன்றுமாய்தெருநாய்களின் குரைப்பு மீண்டும் ''பட்...பட் படீர்'' எனும் ஆட்லறி ஒலிகள்.

சிவலிங்கம் நித்திரை கலைந்து பாயிலிருந்து பதைபதைத்து எழுந்தான். அவன் நெஞ்சுவழமைக்குமாறாக அடிப்பது அவனுக்குத் தெளிவாகக் கேட்கிறது மனைவி லட்சுமியைத் திரும்பிப்பார்த்தான். தோட்டத்தில் ஓய்வின்றி வேலை செய்த களைப்புத்தீர இரண்டு குழந்தைகளையும் அணைத்தபடி இந்தஉலகத்தையே மறந்து துங்கிக் கொண்டிருக்கிறாள்.

டும்.. டும்.. டும்... டொக்... டொக். பட் ...பட் ...படீர் ஆமி வெளிக்கிட்டானோ...... மல்லாகப்பக்கமாவா... இடைக்காட்டுப்பக்கமாவா... குழம்பினான் சிவலிங்கம். அவனால் படுக்கமுடியவில்லை. மீண்டும் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

''ஆமி வெளிக்கிடப்போறானாம்... ஆமி வெளிக்கிடப் போறானாம்... தகரங்கள்கழட்டியிட்டானாம்...'' சந்தையிலும் தேத்தண்ணிக்கடையிலும் கூடிக்கதைத்தவர்களின் கதைகள் அவனது நினைவுகளில் தோன்றி மறைந்தது.

டும்...டும்...டும்... டொக்... டொக்...பட்பட்பட்... படீர்... தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்கள் அதிலிருந்துகிளம்பும் சன்னங்கள் மழைபோல் பொழிந்துகொண்டிருக்கிறது.

''லட்சுமி எணை.. எணை லட்சுமி'' நிம்மதியாய் தூங்கியவள்அரை நித்திரைவேக்காட்டில் சோம்பலை முறிக்கமுயல் கையில்

''என்னணை உது . ஆ...'' என்றபதைபதைப்புடன் எழுந்தாள்

''அவதிப்படாதை...அந்தரப்படாதை...கொஞ்சம்பொறு''

'என்னத்தையணைபொறுக்கிறது. துவக்குவெடியள்இஞ்சாலை தான் கேட்குது. ஆமி வெளிக்கிட்டிருப்பன். அந்த அடுக்கிவைச்ச சூட்கேசுப்பெட்டியை தூக்கிக் கொண்டு தூரவா போவோம்'' என்றபடிபிள்ளைகளைத் தூக்க முயன்றவளை

''கொஞ்சம் பொறு பாப்பமணை', சிவலிங்கம் தடுத்தான். பொழுது மெல்லவிடிய ஆரம்பித்தது.

''பட்.. பட்.. படீர்''ஓசையுடன் மீண்டும் ஆட்லறிகள். பின்ஒழுங்கையில் சனங்கள் கதைத்தபடிசெல்வதும் இடையிடையே குழந்தைகளின் அழுகுரல்களும் கேட்கிறது இவற்றைமீறி நாய்களின் குரைப்பொலி சிவலிங்கம் குடிலுக்கு வெளியே வந்தான். சனம் சாரைசாரையாக... குழந்தைகள்...சின்னஞ்சிறிசுகள்... கைகளில் அகப்பட்ட பொட்டலங்கள் நிலைமை அவனுக்குப் புரிந்தது.

''அண்ணை ... அண்ணை... என்னவாம் உங்கை''

ஆமி வெளிக்கிட்டுட்டான் எண்டு கதைக்கினம்அளவெட்டியில் இருந்துசனங்கள்வெளிக்கிட்டிட்டு ...'' அவதியாய்ச் சொல்லிக் கொண்டே போனான் ஒருவன்.

''லட்சுமி இனிப்பொறுக்கேலாதணை...'' குழந்தையளை எழுப்பு.

''அப்ப நான் சொல்லையுக்கை...''

இனி உந்த வியாக்கியானத்தை நிப்பாட்டிப்போட்டு குழந்தையளை எழுப்பு நான் சைக்கிளிலை சூட்கேசை கட்டுறன். அந்தத் தட்டுமுட்டுச் சாமான்களையும் எடு...'' என்றவாறு சைக்கிளை வெளியே தூக்கி வந்தான்.

''டும்'''டும் . டும்... டுமீல்... டுமீல்...பட்...பட் ...டொக் ... டொக் . சத்தங்கள் கிட்டவாய்க் கேட்டன செயின் புளக்கின் உறுமலும் மெல்லமாய்க் கேட்டது. சன்னங்கள் கூவிக்கொண்டு சென்றன.

''லட்சுமி வெளிக்கிடு இனி நிக்கேலாது. றவுண்சுகள் பிச்சுக்கொண்டு போகுது'' அவசரப்படுத்தினான் சிவலிங்கம்,

லட்சுமி ஒரு கையில் கூடையோடு சின்னவனைத் தூக்கிக் கொண்டு நடந்தாள் சிவலிங்கத்தின் சைக்கிள் கரியல்,சூட்கேஸ், தட்டுமுட்டுச் சாமான்கள் சகிதம் நிரம்பிக் கிடந்தது. மூத்தவனை சயிக்கிளில் ஏற்றினான் உடலை வருத்தி உழைத்தஉழைப்பில் வாங்கிய காணியை விட்டுப்பிரிய அவன் மனம் மறுத்தது. தான் சிறுவனாய் இருந்த போது எத்தனையோ இரவல் காணிகளில் வாழ்ந்த கொடிய நினைவுகளும் அந்த நிலை தன் குழந்தைகளுக்கு வரக் கூடாது என்பதற்காக உழைத்துஉழைத்து கஷ்ரப்பட்டு அந்த காணியை சொந்தமாக வாங்கியதும் அவன் நினைவலைகளில் தோன்றி மறைந்தன.

''சன்னங்கள்கூவிக்கொண்டு செல்லும் சத்தங்கள்... கிட்டவாய் ...''

அவர்கள் பயணம் தொடங்கியது. இடையிடையே மனித ஓலங்கள்... தெரு நாய்களின் குரைப் பொலிகள்... களைத்துச் சோர்ந்த முகங்கள் .. அதிர்ச்சிஆறாதகுழந்தைகள்.. நடக்க முடியாமல் குரலெழுப்பும் சின்னஞ் சிறிசுகள்....

''அப்பவே கொஞ்சச் சாமானுகளை அக்காள் வீட்டை வைச்சிருக்கலாம்...'' சிவலிங்கம் பேசவில்லை.

''ஐயா நாங்கள் எங்கை போறம்'' பெரியவன் கேட்டான். அவனால் பேச முடிவில்லை. நடந்தான். சின்னவள் பசியால் சிணுங்கத் தொடங்கினாள். பயணம் தொடர்ந்தது.

துப்பாக்கிச் சத்தங்கள் இப்பொழுது கேட்கவில்லை. சுன்னாகம் சந்தை வழமைபோல் நடக்கிறது. மனித சக்கரம் வழமை போலங்கு நடக்கிறது.

''குழந்தையளுக்கு தேத்தண்ணி வேண்டிக் குடுத்திட்டு போவம்'' அந்தத் தேத்தண்ணிக்கடைக்கு பக்கத்தே சின்னவளை இறக்கியபடி சொன்னாள் லடசுமி சிவலிங்கம் மூத்தவனை இறக்கி விட்டு சைக்கிளை ஸ்ராண்டில் கஷ்ரப்பட்டுநிறுத்தினான்,மூண்டு தேத்தண்ணி வாங்கினான்.

''என்னண்ணை எங்கைபிரச்சினை என்னமாதிரி உங்காலை நிலைமை....

''ஆமி; எவடத்தையாம்நிற்கிறான்...''

''பெடியள் கனபேருக்கு காயமே...''

சனங்களின் விடுப்புக் கேள்விகள் அவனுக்கு எரிச்சலையூட்டின. ஏதோ சொன்னான் கடையில் சில்லறையைக் கொடுத்துவிட்டு பொக்கற்றைப் பார்த்தான் ஒரு நூறு ரூபாத்தாள் மட்டும் மிஞ்சிக் கிடந்தது.

''ரண்டு நாளைக்குச் சமாளிக்கலாம் '' மனதிற்குள் நினைத்துக்கொண்டான். மீண்டும் பயணம் தொடர்ந்தது.

''எணை லட்சுமி புத்தூர் பள்ளிக் குடத்திலை இருப்போமோ இல்லாட்டில் சின்னாச்சிக் குஞ்சி வீட்டை போவோமோ...''

''பள்ளிக்குடத்துக்குப் போவம். அவவுக்கு பிள்ளையளோடை கரைச்சல்-அவவின்ர உழைப்பு அவவுக்கேகஷ்டம். எங்களையும் வைச்சுக் கொண்டா...''

''சரி பள்ளிக் குடத்துக்கு போவம். கந்தையா வசாவிளானிலை இருந்து போனவரியம் எழும்பி அங்கையிருக்கிறான். எங்களை விடமாட்டான்...காசுஇரண்டு நாளைக்குத்தான் போதும்...''

அந்தச்சிறிய பாடசாலைகலகலப்பாக இருந்தது. இரண்டு ஆசிரியர்கள் சில மாணவர்கள்

''ஆத்திசூடிஅமர்ந்ததேவன் ...'' பாடம் நடக்கிறது. இன்னொரு புறத்தில்உள்ள இரண்டுகட்டிடத்தில் பத்துப்பதினொரு குடும்பங்கள். ஒவ்வொருமூலையிலும் ஒவ்வொரு குடும்பங்கள். சிவலிங்கமும் ஒரு மூலையில் தன்பெட்டியை வைத்துவிட்டு நீண்ட பெருமூச்சுடன் அமர்ந்து கொள்கிறான் லட்சுமி கொண்டுவந்த பொருட்களை அங்குமிங்கும் பரவிக் கொண்டிருக்கிறாள். அந்த முகாம் பெண்கள்அவர்களை பரிதாபத்துடன் சுற்றி நிற்கின்றனர். கந்தையா வந்தான்.

''சிவலிங்கம்...என்னடாப்பா...சொல்லு'' என்றபடி சிவலிங்கத்துக்குமுன் குந்தினான். பின், 'டேய் ..கொம்மாவை தேத்தண்ணி போடச் சொல்லு'' என்று அங்குநின்ற சின்னவனொருவனுக்குக் கட்டளையிட்டான்.

''என்னத்தையண்ணை சொல்லுறது துவக்குசன்னங்கள் கிட்டக் கிட்டவாய்வந்து விழுகுது. செயின்பிளக்குகள் இரையிறசத்தமும் கேட்குது அக்கம்பக்கச்சனங்களும் வெளிக்கிட்டிட்டுது. பின்னைப் பாத்திட்டு வெளிக்கிட்டிட்டம்.

' ஒண்டுக்கும் யோசியாதை நாங்கள்பிறக்கையுக்கைஎன்ன கொண்டே வந்தநாங்கள் கை கால் கிடக்குமட்டும் உழைப்பம். நானும் இப்ப விறகுவியாபாரம் தான். நீயும் வரலாம்.

'எணை எணை வீட்டு உறுதியை வைக்க மறந்து போனேன். இதுக்கை காணயில்லை''

''என்ன.. சிவலிங்கம்அதிர்ந்தான் அவன் நா வரண்டது. நெஞ்சை ஏதோ இறுக்கியது.

''ஓமணை ... உறுதி .. எங்கடை வீட்டு உறுதி...'' அவள் நடுங்கினாள்.

சிவலிங்கம் எழுந்தான். ''நான் வீட்டை போட்டு வாறன். போகேலுமெண்டால் போட்டு வாறன'' அவன் சைக்கிளை எடுத்தான்.

''பாத்துப் போணை.. எனக்குப் பயமாக் கிடக்கு''

''சிவலிங்கம் நானும் துணைக்கு வாறன்''

''இல்லையண்ணை ... நீ இவையளைப்பார்த்துக்கொள் ஒருக்கா சாப்பாட்டுக்கு அரிசி சாமான் வாங்கிக்குடு'' பொக்கற்றிலிருந்த காசை நீட்டினான்.

''உதைவை இண்டைக்கு எங்களோடை சாப்பிடுங்கோ நாளைக்குப் பாப்பம்''

சிவலிங்கத்தின் சைக்கிள் மின்னல் வேகத்தில் பறந்தது.

''உறுதி...உறுதி ... என்ரை வீட்டுறுதி...''

அது அவன் கைகளில் கிடைத்த அந்த நாள் நினைவுகள் நிழலாடின. அவன் அப்பு ஆச்சிகாலம்முதல் இரவல்மண்ணில் குடியிருப்பதும்... காலம் செல்லக் குடிபெயர்வதும் அவன்மனத் திரைகளில் அலைமோதின. தோட்டத்தில் இரவுபகலாய்மாடாய் உழைத்தது. தன் ஆசா பாசங்களை ஒறுத்து உழைத்தமை என்பனவற்றை நினைக்க அவனுக்கு அழுகையே வந்து விட்டது. அந்த ஒன்றரைப்பரப்புநிலமும் அவனுக்கு சொந்தமாகிஅதன் உறுதி அவனுக்குக் கிடைத்த போது தான் விடுதலையடைந்து விட்டதாகஎண்ணிக் கொண்டான்.

''அண்ணை உங்காலை போகலாமே...''

''அண்ணை...அண்ணை உங்காலை போகலாமே ..'' சிவலிங்கம் முன்னேறினான்.

' அண்ணை ... செம்பாட்டுக்கை ஆமி ... பாத்துப்போ''

''அண்ணை ... றவுண்சுகள் வருகுது கவனம் ..''

இக்குரல்கள் அவனுக்குக் கேட்கவில்லை.

''உறுதி ... என்ரை உறுதி... எப்பிடியும் எடுக்க வேணும்'' என்றஉறுதியான வெறியோடு முன்னேறினான்.

''அண்ணை .. அண்ணை ... நில்லுங்கோ''

''உங்கைஎங்கேபோறியள்''

நிமிர்ந்தான் சிவலிங்கம். துபபாக்கி ஏந்திய இரு இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர்.

'' உங்காலை போகேலாது அண்ணை திரும்புங்கோ''

''தம்பி நான் இந்தக் குறிச்சிதான். என்ரைவீட்டுஉறுதி .. என்ரை சொந்த வீட்டு உறுதி உதுக்குள்ளை அம்பிட்டிட்டுது அதைஎடுக்கவேணும்...' அவர்கள் பேசவில்லை.

'' தம்பி நான் என்னை ஒறுத்து, கஷ்டப்பட்டு வாங்கின காணியின்ரை உறுதி தம்பி. அது ஒண்டுதான் என்ரை சொத்து...'' கெஞ்சினான் சிவலிங்கம். மௌனம் நிலவியது.

''அண்ணை .. அந்தமண். உங்கடை உறுதியின்ரை மண் இப்ப அன்னியன்ரை மண். அவனாலை எங்கடை மண் முழுதுமே ஆக்கிரமிக்கப்பட்டிருக்கு வெள்ளைப் பேப்பரிலை கறுத்த மையாலை எழுதின வெறும் பேப்பர்தான் உங்களுக்கு சொந்தம். உங்களுக்கு சொந்தமான அந்த மண்ணிலை அன்னியன் செல்லடிப்பான். குண்டு போடுவான். வீடுகளை எரிப்பான். உங்கடை கையிலை உறுதி கிடைச்சவுடனை நீங்கள் விடுதலை அடைஞ்சதா நினையாதையுங்கோ. எங்கடை மண்முழுதையும் ஆக்கிரமிச்சிருக்கிற அன்னியனை எப்ப விரட்டி அடிக்கிறோமோ அப்பதான் உங்கடை மண்உங்கடை சொந்தமண். அதுமட்டும் இது அடிமை மண்தான். உறுதி வெறும் பேப்பர் தான்''

சிவலிங்கம் அவர்களை ஆழ்ந்து நோக்கினான். அவனது மனதில் புது உணர்வுகள் அரும்பின.

''அண்ணை எங்கடை மண்ணை சுதந்திர மண்ணாய் மீட்கத்தான் நாங்கள் ஆயுதம் ஏந்தினம். நிட்சயமாய் மீட்போம். அதுக்குப் பிறகு இது உங்கடை மண். உங்கடை சொந்த மண்'' அவன் உறுதியாய் சொன்னான்.

''தம்பி வாறன் ..'' சிவலிங்கம் சைக்கிளைத் திருப்பினான் இப்பொழுது அவன் சைக்கிள் நிதானமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அவனில் புதிய தெளிவு பிறந்திருந்தது.

''வெள்ளைப் பேப்பரிலை கறுத்த மையாலை எழுதின வெறும் பேப்பர்தான் உங்களுக்கு சொந்தம் .'' அந்த வரிகள் அவனது காதில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

## விசித்திர மனிதர்கள்

ஒரு காலுக்கு இரண்டு பாதங்கள் கொண்ட கால்கள் உடைய மனிதர்களும் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது எம்மில் எத்தனை பேருக்கு தெரியும்? இந்த உலகின் ஒரு மூலையில்காணப்படும் ஜிம்பாவே காடுகளில் தான் இந்த விசித்திர மனிதர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் உடலமைப்பு எல்லாம் சாதாரண மனிதர்களைப் போல் காணப்பட்டாலும் கால்கள் மட்டும்'நெருப்புக் கோழி'க்கு உள்ளதுபோல் இரண்டு பாகங்களாக பிரிந்து காணப்படுகின்றது. இதனால் இம்மனிதர்களை 'நெருப்புக்கோழி' மனிதர்கள் என்று கூட அழைக்கின்றார்கள்.

இவர்களில் ஆண், பெண் புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் எனஅனைவருக்குமே இத்தகைய கால்கள் காணப்படுகின்றன நாம் கைகளால் செய்யும் பல வேலைகளை இவர்களால் கால்களால் செய்ய முடிகின்றது. அதற்கு இவர்கள் தமது கால் விரல்களை பயன் படுத்திக் கொள்கின்றார்கள். சுபாவத்தில் கோழைகளாக காணப்படும் இவர்கள் உழைப்பதில் சளைக்காதவர்களாக காணப்படுகின்றார்கள். மரத்தில் இலகுவாக ஏறிக் கொள்ளும் இவர்களுக்கு கால்கள் பெரும் உதவி புரிகின்றன.

இமமனிதர்கள் வாழ்வது உலகிற்குதெரிய வந்தது. 1991 ஆம் ஆண்டில் தான். கடைசியில் ஒருசெய்தி-இவ் இன மக்களில் தற்போது நூற்றுக்கணக்கானவர்களே காணப்படுகின்றார்கள்.

தகவல்:
இ. செல்மர் எமில்

# பாபர் மசூதி இடிப்பும் யாழ். நூலக எரிப்பும்

## சிங்கள அரசியல் விமர்சகரின் ஒப்பீடு

அயோத்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சில தினங்களிலேயே இந்துத் தீவிரவாதிகள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. இந்திய உச்ச நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகளைக் கொண்ட பெஞ்ச் ஒன்று இவ் விடயம் தொடர்பான தனது தீர்ப்பில் அயோத்தியா நோக்கிய கரசேவைத் தொண்டர்கள் என்ற அடிப்படையில் பாரதீய ஜனதா, விஷ்வ இந்து பரிஷத், ராஷ்டிரிய சுயம் சேவக், போன்றவற்றை வழிநடத்தியமைக்காக பாரதீய ஜனதாவின் தலைவர் எல். கே. அத்வானி மற்றும் உத்தரப் பிரதேச கல்யாண்சிங் போன்றோர் மீது நீதிமன்ற உத்தரவுகளை அவமதித்தமைக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டுமெனக் கூறியுள்ளது.

ஆனால் யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்டு இகுதனை வருடகாலத்தின் பின்னும் ஏந்தவொரு அரசியல் வாதி மீதோ அல்லது ஜே. எஸ். எஸ். (ஜாதிக சேவக சங்கமய) குண்டர்கள் மீதோ வழக்குத் தாக்கல் செய்யப்படவுமில்லை விசாரணை மேற்கொள்ளப்படவுமில்லை. அல்லது கறுப்பு ஜூலை கலவரத்தின்போது உயர்ந்த பாதுகாப்புடன் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருந்தவர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டது பற்றியும் எந்த விசாரணையும் இதுவரையில் நடத்தப்படவில்லை.

கரசேவை என்பது கைகளால் புரியும் தொண்டு என்றே அர்த்தப்படுத்தப்படும். ஆனால் இந்துத் தீவிரவாதிகளால் அவர்களது நியாயப்படி அயோத்தியாவில் இருந்த பாபர் மசூதி ஒவ்வொரு செங்கல்களாகத் தகர்க்கப்பட்டு விட்டது. உடனடியாகவே மசூதி மீளவும் கட்டப்படும் என்று அறிவித்தார் பிரதமர் நரசிம்மராவ் ஆனால் கொழும்பில் ஆட்சி நடத்தும் எவராவது இதுவரையில் யாழ்ப்பாண நூல் நிலையம் மீளக் கட்டப்படும் என்பதை பேச்சளவில் தானும் தெரிவிக்கவில்லை.

டில்லியிலும், கொழும்பிலும் ஆட்சி நடத்துபவர்கள் கடைப்பிடிக்கும் இரண்டு வித்தியாசமான அணுகுமுறை பற்றி இதன் மூலம் புரிந்து கொள்ளமுடியும். இந்தியாவில் எதிர்க்கட்சிகளின் உயர் தலைவர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால் கறுப்பு ஜூலைப் படுகொலைகள் தொடர்பாக இங்கு எந்த அரசியல்வாதிகளும் கைது செய்யப்படவுமில்லை. விசாரணை மேற்கொள்ளப்படவுமில்லை. கறுப்பு ஜூலையின் கொடூரத்தையும், வெட்கக்கேட்டையும் இங்கு நினைவு படுத்துவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. இந்தியாவின் அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது வெளியுறவு அமைச்சரான பி. வி. நரசிம்மராவை கொழும்புக்கு அனுப்பிவைத்தது இந்தச் சம்பவத்தின் போதுதான். இந்தியத் தலைவர் சிறிலங்காவில் நடக்கும் தமிழர் படுகொலைகள் பற்றி இந்திய நாடாளுமன்றத்தில உறுப்பினர்கள் கேள்வி எழுப்புவதாக ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவிற்கு தெரிவித்தார். அதைத்தொடர்ந்து இங்குள்ள நிலைமைகளை நேரில் மதிப்பிடுவதற்காக வெளியுறவு அமைச்சர் ராவ் வரவழைக்கப்பட்டார். இது இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தனது அக்கறையை வெளிப்படுத்திய முதலாவது வெளிப்படையான சம்பவமாக அமைந்தது. இது பின்னர் படையெடுப்பு வரை செல்வதற்கான உரிமையை வழங்கியது.

அரசாங்கத்தின் நடத்தை பற்றிய கேள்விகளுக்கு அப்பால், ஒவ்வொரு குடிமகனும் மொழி, மத, இன சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமாக வாழ்க்கை நடத்துவதற்கு சாத்தியப்படுதல் வேண்டும். இந்த அடிப்படை மனித உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டு மதிக்கப்படாத இடத்து பல தேசிய இனங்கள் கொண்ட நாடுகள் உயிர் வாழ்வது சிரமமானதே. பல்வேறு நாடுகளிலும் நடக்கும் சம்பவங்கள் பற்றி எமது உள்ளூர்ப்பத்திரிகைகளில்செய்தியாகப் படிக்கும் நாம் கவனித்துக் கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் இதுவாகும்.

> ஐலன்ட் வார இதழின் 13-12-92 ஆம் திகதிய வெளியீட்டில் அரசியல் விமர்சகரான கெளடில்யா (மேர்வின் டி. சில்வா) எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதியின் மொழியாக்கம்.

கறுப்பு ஜூலையின் கொடூரம் மிகுந்த நாட்களில் எலிஸபெத் நிசான் தனது கலாநிதிப்பட்ட ஆய்வுகளுக்காக அநுராதபுரத்தில் தங்கியிருந்தார் ஜேம்ஸ் மனோர் எழுதிய "சிறிலங்காவில் மாற்றங்களும், நெருக்கடிகளும்" என்னும் நூலுக்கான தனது பகுதியில் இந்நாட்டு அரசுத் தலைவரின் பிரதிபலிப்புகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி கலவரம் ஆரம்பித்த நான்கு நாட்களுக்குப் பின்னர் தான் வாய் திறந்தார். கலவரம் வெடித்தது முதல் நான்கு தினங்கள் வரையில் ஆகக் குறைந்தது பொது மக்களுக்கு அவர் எதுவும் கூறவில்லை. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் பரப்பப்பட்ட தமது அமைச்சரவை சகாக்களின் உரையைப் போலவே அவரது உரையும் தொடர்ந்தது நடந்து. போன சம்பவங்களுக்காக கவலையும் வருத்தமும் தெரிவிப்பதாக தொடங்கிய அவரது உரையில் சிங்கள தமிழ் மக்களுக்கு இடையே நம்பிக்கையீனம் வளர்ந்திருப்பதாகக் குறிப்பிட்டார். 1956ஆம் ஆண்டில் தூவப்பட்ட இனவாத வித்துக்கள் 1976ஆம் ஆண்டின் தனிநாட்டுக் கோரிக்கையுடன் மேலும் எழுச்சி பெற்றதாகவும் தெரிவித்த அவர் வன்முறைகளில் தமிழர் ஈடுபடத் தொடங்கியதால் சிங்களவர் ஆத்திரம் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இத்தகைய சிங்களவரின் ஆத்திரத்தை கண்டனம் செய்வதற்கு பதிலாக அதற்கு நியாயம் தேடுவதாகவே ஜனாதிபதியின் உரை இடம்பெற்றதாக இவ் எழுத்தாளர் சுட்டிக்காட்டியுள்ளார் தமது பேச்சின் ஆரம்பத்திலேயே 2,500 ஆண்டுகளுக்கும் மேலாகப் பேணப்பட்டு வரும் ஒற்றையாட்சியிலிருந்து தனியரசு ஒன்றைப் பிரித்துக் கொடுப்பதற்கு சிங்களவர்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஈழம் கோரிக்கை எதிரான சிங்களவரின் பிரதிபலிப்பானது, விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லாதது என்றால் இனக்கலவரம் ஏற்படுவதற்கு சிங்களவர்கள் காரணமில்லை என்று கூறித் தப்பித்துக் கொள்ள முடியுமா?

இது வெறும் உணர்ச்சிபூர்வமான அடிப்படையில் மட்டும் தான் சம்பவித்ததா? ஜே. எஸ். எஸ். குண்டர்கள் திட்டமிட்ட வகையில் பயன்படுத்தப்படவில்லையா? உலகம் தவறாக வழி நடத்தப்படவில்லையா?

இந்தக் கேள்விகள் இங்கு எழுப்பப்படுவது பொருத்தமானது. ஏனெனில் அரசாங்க அறிக்கைகள் காலம் பிந்தித்தான் வெளியிடப்பட்டன. அத்துடன் மிகவும் தந்திரமான முறையில் வார்த்தைகள் பின்னப்பட்டு பிரிவினை கோரும் அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்படுவதாகப் பிரகடனம் செய்யப்பட்டது அதாவது நாடு பிளவுபட்டுவிடக்கூடாது என்ற சிங்கள மக்களின் மனவிருப்பத்தை நிறைவேற்றுவதற்கு வேறுவழி இல்லாமலேயே அரசாங்கம் இந்தப் பிரகடனத்தை வெளியிடுவதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# சாமுவேல் பெஞ்சமின்:

## ஒப்பனைக் கலையின் சரித்திரநாயகன்

ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டைத் தெரிந்து கொள்வதற்கு இலக்கியம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவு முக்கியம் ஒப்பனைக் கலை இந்தப் பண்பாட்டுப்பதிவு சாமுவேல் பெஞ்சமினின் ஒப்பனைக் கலையில் சீராக ஒட்டிக்கொண்டிருக்கிறது. சிறுவனாயிருக்கும் போதே பெஞ்சமினுள் ஓவியம் கருக் கொண்டது. ஓவியத்தின் களத்தில் ஒப்பனைக் கலையைப் பழகியவர் பெஞ்சமின். மூத்த ஒப்பனைக் கலைஞர் என்பது மட்டுமல்ல அவர் ஒரு ஓவியரும் கூட. பெஞ்சமினின் கலைப் பணியைக் கௌரவிக்கும் வகையில் ஊரெழு மகவம் கலை இலக்கிய மன்றம் அவருக்கு ஒப்பனைக் கலா வேந்தர் என்ற விருது வழங்கி பாராட்டியது. யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் டிசம்பர் 3-1992இல் தொழில் அதி திறமை விருது (Vocational Excellence Award) வழங்கி அவரைப் பாராட்டியது. பெஞ்சமினுக்கு இப்பொழுது வயது 77.

**சந்திப்பு: மதன்**

★ உங்களால் எப்படி ஒப்பனைக்காரராக முடிந்தது? எத்தனை வருடங்களாக ஒப்பனை செய்து வருகிறீர்கள்?



ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஒப்பனை செய்து வருகிறேன். எனது தந்தை கபிரியேல் சாமுவேல் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தில் பனைஓலை வர்ணப் பெட்டி, கொட்டைப்பெட்டி தெறிப் பெட்டி முதலியவற்றை விற்று வந்தார். அந்தக் காலத்தில் கத்தோலிக்க நாட்டுக் கூத்துகளிலும் ஆடியிருக்கிறார். கூத்துக்களில் சோடனைகளைப் பார்த்த எனக்கு ஒப்பனைக் கலையில் நாட்டம் வந்தது. அத்துடன் எனது உறவினர்களில் பலர் சோடனைக்காரரர்கள். அப்படியொரு சூழலில் அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று ஒப்பனைப் பொருள்கள் செய்து பழகி வந்தேன். புனித சாள்ஸ் பாடசாலையில் படித்த காலத்தில் நன்றாகப் படம் வரைவேன். இந்தத் தளத்தில் எனக்கு ஒப்பனையில் நாட்டம் ஏற்பட்டது.

★ ஒப்பனைக் கலைஞர்களைச் சோடனைக்காரர்கள் என்றும் அழைக்கிறார்கள் அதன்பொருள் என்ன?

அந்தக் காலத்தில் கூத்தில் கப்பற் பயணக் காட்சி அல்லது தேரோட்டம் இடம்பெற்றால் மரத்தால் கப்பல் அல்லது தேர் கட்டி சில்லுகள் பூட்டிக் கொடுப்பதுவும் ஒப்பனைக்காரரின் வேலை. 1931 இல் பாஷையூரில் பப்பிரவாகன் கூத்து நடைபெற்றது. அந்தக் கூத்தில் தேர் ஒன்று செய்யப்பட்டு, அதிலே பப்பிரவாகன் இருக்கச் சிலர் கூத்துக் களரி வரை இழுத்து வந்தார்கள். இப்படியான பெரும் காட்சிகளை (Pageant) கூத்துக்குரியவாறு அமைப்பதால் பொதுப்படையாகச் சோடனைக்காரரர்கள் என்று அழைப்பதும் வழக்கம். மற்று படி மேடைகளில் கட்ட வேண்டிய திரைகளையும் [சீன்ஸ்] ஒப்பனைக்காரர் வரைவதுடன், ஆடுநருக்குப் பொருத்தமான ஆடைஅணிகளையும் தயாரிக்க வேண்டும். மேக்-அப் என்றால் முகத்துக்குச் சாயம் பூசுதல் என்று சிலர் நினைத்து விடுகிறார்கள். அப்போதெல்லாம் ஆடுநர்களுக்குரிய ஒப்பனை உள்ளிட கூத்துக் களரிச் சோடனை அனைத்தையும் உள்ளடக்கியது ஒப்பனைக் கலை.

★ இத்துறையில் உங்கள் முன்னோடிகள் யார்?

ஒரு காலத்தில் சித்திரவேலை. கல்யாணவீட்டுச் சோடனை, கூத்துச் சோடனை எல்லாம் இந்த றோட்டில் தான் (கொய்யாத்தோட்டம்) இருந்தன. எனது உறவினர்களில் பலர்முன்னணி ஒப்பனைக் கலைஞர்களாகவும் விளங்கினர் அவர்களுள் ஜே. பிலிப்பு, ஏ. டேவிற, எஸ். செல்லையா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுக்கு முந்திய தலைமுறையில சுண்டிக்குளி மருதடி பிள்ளையார் காவிலடியில் சோடனைக்காரக்பொன்னரும். செல்லப்பாவும் ஒப்பனையைத் தொழிலாகச் செய்து வந்தார்கள். இந்தத் துறைக்கு மேற்கூறியவர்களின் பங்களிப்பு பெருமை கொள்ளும் வகையில் இருந்தது உண்மை. ஆனால் அவர்கள் இன்று மறக்கப்பட்டு விட்டார்கள் என்றே நினைக்கிறேன். அவர்களது பணிகள் ஆராயப்பட வேண்டியதாகும்.

★ ஒப்பனைக் கலையை நீங்கள் முழுநேரத் தொழிலாகச் செய்கிறீர்களா அல்லது பகுதிநேர வேலையாகச் செய்கிறீர்களா?

எனது உறவினரான பிலிப்புடனும். டேவிற்றுடனும் தான் நான் முதலில் ஒப்பனை பழகினேன். கூத்து மேடைகளில் கட்டுவதற்குரிய திரைகளையும் சீலைத்தூண்களையும் முதலில் வரைந்து வந்தேன். தாம் ஒப்பனை செய்யும் இடங்களுக்கெல்லாம் என்னையும் அழைத்துச் செல்வார்கள், வருவாய் என்ற நோக்கில் எனக்கு மிகுந்த பலன் கிடைக்கவில்லை. அதனால் அவ்வப்போது இத்துறையில் தனியாக சிறிய முயற்சிகளை மேற்கொண்டேன். இந்த ஆர்வம் பிற்பாடு தொழிலாக மாறப்போகிறது என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை 1930 களிலிருந்து ஒப்பனைக் கலையை நான் தொழிலாகவே செய்து வருகிறேன் முதல்கட்டத்தில் சிறுமுயற்சிகளை இத்துறையில் மேற்கொண்டு வந்தேன். நெடுந்தீவுமேற்கை சேர்ந்த கார்த்திகேசு அண்ணாவியார்பழக்கிய கண்டி அரசன் கூத்துக்கு 1939 இல் முதல் முதலாக ஒப்பனை செய்தேன். ஒப்பனைக் கலையில் தன்னந் தனியாய் என்இஷ்டப்படியே தொடங்கப்பட்ட முதல் வேலை இது தான். இன்று காலத்துக்கு ஏற்றவாறு சில மாற்றங்களை அனுசரித்து மரபார்த்த முறையிலேயே ஒப்பனைசெய்து வருகிறேன்,

★ ஒப்பனைச் செயற்பாட்டில் உங்கள் அனுபவங்களைக் கூற முடியுமா?

இத்துறையில் பலவிதமான குணாதிசயங்கள் உள்ளவர்களை நேருக்கு நேர் சந்திக்க வேண்டி ஏற்படும். சில சமயங்களில் கூத்தாடுபவர்கள் தத்தமக்கேற்ற ஒப்பனைக்காரரை கூத்துக் கொட்டகைக்கு அழைத்து வந்து விடுவார்கள். ஒப்பனையைப் பொறுப்பேற்றவருக்கு இது தர்மசங்கடமாகி விடும். 1931 இல் பாஷையூரில் பப்பிரவாகன் கூத்தில் இப்படியொரு சம்பவம் எனக்கு நிகழ்ந்தது. சில சமயங்களில் சேனாதிபதி உண்மையான குதிரையில் ஏறி கூத்துக் கொட்டகைக்கு வந்து சேர்வார். இவருக்கு அவர் வீட்டில் வைத்து ஒப்பனை செய்ய வேண்டும் ஆடுபவர்கள் குதிரையையும், பீரங்கியையும் மேடைக்குக்கொண்டு வந்த சம்பவங்களும் நிகழ்ந்

(6ஆம் பக்கம் பார்க்க)

சாமுவேல

துள்ளன. இதனால் சண்டைகளும் நடந்துள்ளன. இன்னும் சிலர் தாம் விரும்பிய வேறே ஒப்பனை செய்யும்படி ஒற்றைக்காலில் நிற்பார்கள். இப்படியான சூழ்நிலைகளில் ஒப்பனைக் கலைஞர் சமயோசிதமாக நடக்கப் பழகிக்கொள்ள வேண்டும். மற்றும் படி வேஷப் பொருத்தமும் வேண்டும். எல்லோருக்கும் வேஷம் எடுபடாது. ஆள் பாதி, ஆடை பாதி என்பார்கள். குருநகர் செம்பன், பாலஷ்ஷு அருளானந்தம், பூந்தாவ யோசேப் அரசாத்திரத்துக்கு மிகவும் பொருத்தமானவர்கள். அரியாலை சிட்டான், நெல்லியடி ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் பெண் வேஷத்துக்கு என்றே பிறந்தவர்கள். இவர்களுக்கு ஒப்பனை செய்ததில் எனக்கொரு திருப்தி. மூத்த

சண்முகலிங்கம், கலையரசு சொர்ணலிங்கத்தின் தேரோட்டி மகனில் அரிச்சந்திரனாக நடித்தவரையும், அவருக்கு நான் செய்த ஒப்பனையும் இன்றும் எனது மனதில் நீங்காத நினைவாக உள்ளது.

★ தொழில் ரீதியாக நீங்கள் ஒப்பனை செய்ய ஆரம்பித்தபின் நீங்கள் ஒப்பனை செய்த நடிகர்கள் பற்றிக் கூறமுடியுமா?

1950 இல் இருந்து சுமார் 4000 நாடகங்களுக்கும் கூத்துக்களுக்கும் ஒப்பனை செய்துள்ளேன் ஈழத்தில். அவைக் காற்றுக் கலை வரலாற்றில் சிறந்த கலைஞர்கள் எனப் போற்றப்படும் இணுவில் நாகலிங்கம், நெல்லியடி ஆழ்வாப்பிள்ளை மற்றும் இந்தியாவிலிருந்து இங்கு வந்து புகழ் வாட்டிய ஏ. வள்ளி (தம் போலையா) லோசராதிபட்டர் பாரிஸி மரபிலான நாடகங்களை மேடையேற்றிய வேல நாயர் குழுவிற்கும் ஒப்பனை செய்துள்ளேன். அதேபோல கலையரசு சொர்ணலிங்கத்தின் பேதாள உலகம், தேரோட்டி மகன் ஆகிய இரு நாடகங்களுக்கும் ஒப்பனை செய்ததைப் பெருமையோடு பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். 1954 இல் என்று ஞாபகம் பறங்கித் தெருவில் முதலாம் குறுக்குத்தெரு) நடனக் கல்லூரியை நிர்வகித்த இராசநாயகம் இந்திய நடனக்கலைஞர்களை அழைத்து கிழக்கிலும், தென் இலங்கையில் நாட்டிய நாடகங்களை நடத்தியபோது ஒப்பனை செய்தவன் நான். இணுவில் ஏரம்பு சுப்பையா அவர்களின் நடனக் கல்லூரி மாணவிகள் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கூத்துக்கள் கலாநிதி இ. பாலசுந்தரம் தயாரித்தளித்த காவலராமன் மற்றும் அ. தாசியஸ், குழந்தை சண்முகலிங்கம் ஆகியோரின் நவீன மேஸ்தர் நாடகங்களுக்கும் ஒப்பனை செய்திருக்கிறேன். கே. செ. நடராசா கொழும்பு சைவ மங்கையர்கழகத்தில் மேடையேற்றிய சத்தியவான் சாவித்திரிக்கும் 1970 களில் பாலேந்திராவின் நாடகங்களுக்கு யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி ஆகிய நகரங்களில் ஒப்பனைப் பொறுப்பை ஏற்றுச் செய்து பரிசு பாராட்டுக்களை பெற்றுள்ளேன். மாதரிக் வி.ஸ்டைட் கொழுவினரின் நாடகங்களுக்கு ஒப்பனை மட்டுமல்லாமல் மேடை அலங்காரமும் செய்து கொடுத்துள்ளேன்.

★ மறக்க முடியாத தன்மை வாய்ந்த சம்பவங்கள் ஏதாவது உங்கள் ஒப்பனைக் கலை வாழ்க்கையில் உள்ளனவா?

கொல்லங்கலட்டியில் சத்தியவான் சாவித்திரி நாடகம் ஆரம்பிக்கப் போகின்ற வேளையில் ஒரு நாடக நடிகன் மேடைக்குப் பின்னால் ஒருவனைக் கொலை செய்து மறைத்து வைத்துவிட்டு ஒரு அசம்பாவிதமும் நடக்காதது போல் நாடகத்தில் நடித்துவிட்டு தலைமறைவாகியதை என்னால் மறக்க முடியாது. மற்றொரு சம்பவம் - நீர்வேலியில் கலைஞர் வைரமுத்துவுடன் ஒப்பனைக்குச் சென்றபோது சரமாரியாகக் கற்கள் வீசப்பட்டன. ஹார்மோனியப் பெட்டியுடன் நானும் வைரமுத்துவும் ஓடி மறைந்துவிட்டோம்.

★ இப்போது ஒப்பனைக்கலையின் நிலை என்ன?

ஒப்பனைக் கலை இங்கு பரம்பரையான முறையிலேயே நடைபெறுகிறது. மேற்கு நாடுகள், கொழும்பு, இந்தியாவைப் போல ஒப்பனைக் கலையில் தொழில்நுட்பமுறையில் பயிற்சி பெற்றவர்கள் இல்லை என்பது பெருங் குறை. ஒப்பனைக் கற்கை நெறியை பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு, புறநிலைப் படிப்பு அலகு ஆகியன தமது கலைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வது தமிழ்ச் சமூகத்துக்குப் பயன் பெருத்தமாக அமையும். ஒப்பனைக்குரிய அணிகலன்கள், அழகுசாதனப் பொருள்கள். Indian Tabe Colour என்னும் பூச்சுப் பொருள்கள் இப்போது கிடைப்பதில்லை என்பது உண்மைதான். இதற்காக அங்கலாய்க்கக் கூடாது. வெளியூர் ஒப்பனைப் பொருள்களுக்குப் பிரதியீடாக உள்ளூர்ப் பொருள்களைத் தாராளமாகப் பாவிக்கலாம். எமது இளம் கலைஞர்கள் உள்ளூர் ஒப்பனைப் பொருள்களைப் பாவிக்க முன்வர வேண்டும். இப்போது உள்ள சூழ்நிலையில் வெளியூர் வேலைகள் குறைவு. அதனால் வருமானம் சற்றுக் குறைவு. அவ்வளவுதான்!

---

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர்

## சங்கங்களின் சமாசம்

தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடையை எதிர்த்தும், நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் எதிர்வரும் 11-1-93 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூரில் இருந்து யாழ். செயலகம் நோக்கி ஆரம்பமாகவுள்ளது. இவ் ஊர்வலத்தில் அனைத்துக் கிளைச் சங்கங்களும், உறுப்பினர்களும் தங்கள் நிலையங்களை மூடிச் சகலரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சூசை எட்வேட்
தலைவர்

ச. அன்ரன் இராசநாயகம்
செயலாளர்

(3948)

---

ஈழநாதம்

# 3-ம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப்படப் போட்டி [Cartoon], கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பவற்றை நடாத்த முன் வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உங்கள் ஆக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

- கருத்துப் படங்கள் [Cartoon]
- சிறுகதை
- கவிதை

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ.மீ X 12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5ஆம் திகதிக்கு முன்பதாக 'ஈழநாதம்' அலுவலகத்தைச் சென்றடைதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதுடன், பிந்திக்கிடைப்பவை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1993 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

மூன்றாவது ஆண்டு நிறைவு விழா போட்டியில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும். முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு மூன்றாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப் போட்டி என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு,

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

---

# 45 ஆம் நாள் வீரவணக்கம்

25-11-1992 அன்று மன்னார் பரியாரிகண்டலில் எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த லெப். மதிக்கு எமது வீரவணக்கங்கள்.

வீர ஜனனம்
16
|
02
|
1971



வீரச் சாவு
25
|
11
|
1992

## லெப். மதி

(பாலசிங்கம் சத்தியசீலன்)

நவக்கிரி, புத்தூர்.

மதியாகி எங்களது மனதில் நின்றாய்
மாவீரனாகி எங்கள் நிலத்தில் வென்றாய்
நதிபோல எம்மண்ணில் பாய்ந்து சென்றாய்
நாமெல்லாம் கதிகலங்க எங்கே சென்றாய்
விதியான வெடியுந்தன் உயிரைக் தின்ற
வேதனையை என்னென்போம், விரைவில் இங்கே
எதிரிகளின் பாசறைகள் எரியும், உந்தன்
இலட்சியத்துக் கனவெல்லாம் நனவாய் ஆகும்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**
**மன்னார்த் தொடர்பகம்**

(சி-5724)


# 45 ஆம் நாள் நினைவலைகள்



மேஜர் தமிழரசன்
(டொச்சன்)
(கந்தசாமி ஜெயக்குமார்)
புன்னாலைக்கட்டுவன்
வடக்கு



கப்டன் வீமன்
நாகையா சுப்பிரமணியம்)
சாவகச்சேரி வடககு



கப்டன் மதன
[ஜிம்]
(குமாரவேலு
வினோதகுமார்]
[நெடுந்தீவு மேறகு
நெடுந்தீவு



கப்டன் மலரவன்
[லியோ]
(காசிலிங்கம் விஜிந்தன்)
இராமலிங்கம் விதி,
திருநெல்வேலி.



2-ம் லெப்.
நல்லதம்பி (டகிர்)
(அரியகுட்டி தேவதாசன)
புன்னாலைக்கட்டுவன்
வடக்கு.



லெப்டினன்ட்
இறைஅமுதன்
(சிந்து)
(சபாரத்தினம்
விஜயகுமார்)
10-ம் வட்டாரம், புதுக்குடி
யிருப்பு, முல்லைத்தீவு.

23-11-92 அன்று பலாலி இராணுவத்
தொடர் காவலரண்கள் மீது தாக்குதல்
நடாத்தி 150 காவலரண்களையும்
கைப்பற்றி வீரச்சாவடைந்தார்கள்



வீரவேங்கை
மாயவன்
(தர்மசிங்கம சிறீதரன்)
5-ம வட்டாரம், திரியாய்,
திருக்கோணமலை.



2-ம்லெப்.
துரியோதனன்
(யசி)
(மகாலிங்கம் ரஜிஸ்வரன்)
கோப்பாய வடக்கு,
கோப்பாய்

குருதிமழை கொட்டகோலோச்சும் சிங்களத்தின்
பிடரிதனைப் பிய்த்து பெருவெற்றி தனையீட்டி
வருகின்ற தமிழினத்தின் வாழ்வினுக்குஉரமாக
பொருதி நின்று உயிர்நீத்த போர்மறவர் தாள்
பணிவோம்



வீரவேங்கை
நகையன்
(அன்ரு)
(தேவராஜா ஜேசுநேசன்)
பிறஸ றோட், சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.



வீரவேங்கை
வீரமணி
(மகாலிங்கம் சுதர்சன்)
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.



வீரவேங்கை
இசைக்கோண்
(சிவசாமி கண்ணன்)
அல்வாய் மேறகு,
அல்வாய்.



வீரவேங்கை
தில்லைச்
செல்வன்
(ரகுபதி)
சின்னப்பொடிகவிரஞ்சன்,
6-ம் யூனிட் இராமநாதபுரம்



கப்டன்
முத்துச்செல்வன்
[நேரு]
(ஜெயரட்ணம்
பாலச்சந்திரன்)
நவக்கிரி, புத்தூர்


இவர்களுடன் வீரச்சாவெய்திய ஏனைய வேங்கைகளுக்கும் எமது இதய அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்

நண்பர்கள்

(இ-5722)

# 5-ம் ஆண்டுநினைவலைகள்

பிறப்பு
29
—
03
—
1960



வீரச்சாவு
09
—
01
—
1988

யாழ். மாவட்ட தளபதி

## லெப். கேணல் பாண்டியன்

[செல்லத்துரை ஸ்ரீகரன் (குட்டி) ]

09. 01. 88இல் காரைநகரில் இந்தியப்படையின் சுற்றி வளைப்பின் போது தன்னைத் தானே சுட்டு வீரச் சாவடைந்தார்.

தமிழ்த்தாயின் துயர் நீக்கத் துணிந்து எழுந்தவன்- புலித் தானையிலே தானிணைந்து தளபதியுமானவன்
சிங்களத்து இராணுவத்தைச் சிதறடித்தவன் - பின்னர் இந்தியப் படையணிமேல் புலியாய்ப் பாய்ந்தவன்
விடுதலை நெருப்பினையே விழியில் சுமந்தவன் - தான் வீழ்கின்ற போதிலும் புது வித்தாய் வீழ்ந்தவன்
எதிரிகையில் அகப்படுதல் ஈனமென்றவன் - இதனால் தன்கையால் தன் சாவை எழுதிக் கொண்டவன்!

கொக்குவில் மத்திய
சனசமூக நிலையம்

(சி-3719)

---

**JDCSI**

## தென் இந்திய திருச்சபை
### யாழ். ஆதீனம்

இவ் ஆதீனத்தின் விசேட கூட்டம் பிரதிநிதிகளுக்கு முன் அறிவித்தபடி வட்டுக்கோட்டையில் சனிக்கிழமை (நாளை) 9 ஆம்திகதி 9 30 மணிக்கு நடைபெறும்.

அ. கதிர்காமர்
தலைவர்
(விசேட கூட்டம்.)

(3245)

---

வினாயகர் விளையாட்டுக்கழக ஆதரவில்
11 பேர் கொண்ட மாபெரும்

## காட்சி உதைபந்தாட்டம்

இடம்: சிறீபாஸ்கரன் விளையாட்டரங்கு
மலாகம் ( R. D. S )

காலம்: இன்று (08 - 01 - 1993) வெள்ளிக்கிழமை
மாலை 3.00 மணி

- யங்றோயல் (காங்கேசன்துறை) எதிர் ஞானகலா (மயிலங்காடு)
- சென் மேரிஸ் நாவாந்துறை எதிர் றோயல் (ஊரெழு)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அளவெட்டி வடக்கு.
07 - 01 - 93
[சி-5723]
வினாயகர் விளையாட்டுக் கழகத்தினர்

---

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய
மாணவர் சங்கம் நடாத்தும்

## முழுநிலாநாள் அறிவியலரங்கு

1993-01 08 இன்று மாலை 3.30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில்.

விடயம்

**"மூன்றாம் கட்ட உலக மயமாக்கல்"**

- திரு. முத்தையா திருநாவுக்கரசு

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

ப. மா சங்கம்
யா. இ. க.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

(சி-5721)

---

# 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி

வீரஜனனம்: 03 — 11 — 1973




வீரச்சாவு: 24 — 11 — 1992

## கப்டன் முத்துச்செல்வன்

[ஜெயரட்ணம் பாலச்சந்திரன்]

மறத்தமிழர் நாமெனவென்று மானம் காக்கச் சென்றாய்
தரணிவாழ் தமிழினத்தின் மனங்களிலே... முழுமதியாய்
-என்றும் நீநிலைத்தாய்
எதிரியவன் பாசறைக்குள் புலியாகப் பாய்ந்தாய்...
திக்கெட்டும் எங்களினம் தலைநிமிர்ந்து வாழ
தலைவனின் வழியில் நீ தளராது நின்றாய்
களத்தில் நீ வீழ்ந்த போது கண்ணீர்தான் எமக்கு
இருந்தும் வரலாறாய் ஆகிவிட்டாய் ஆற்றுகிறோம்எம்மை

வீர ஜனனம்: 16 — 02 — 1971



வீரச் சாவு: 25 — 11 — 1992

## லெப். மதி

(பாலசிங்கம் சத்தியசீலன்)

அன்புக்குரியவனே எமதினிய சத்தியனே
மதியென்ற அழகான பெயரோடு - நீ அன்று அடலேறு
போல் சென்று ஆகுதியானவனே
அன்போடு நீ இங்கு எப்போது வருவாயென்று
ஆவலோடு நாம் இங்கே காத்திருந்தோம்
ஈழமண்ணுக்காய் உரமாகி மாவீரன் ஆகிவிட்டாய்
மறக்கமாட்டோம் என்றும்.
என்று இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

8-1-93 இன்று வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் 45 ஆவது நினைவு நாளில் உற்றார், உறவினர், நண்பர்கள், சகயோராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்

நவக்கிரி

-குடும்பத்தினர்

[சி-5718]

---

## பாடசாலையில் சைக்கிள் திருட்டு

கல்லூரி சைக்கிள் பாதுகாப்பு நிலைத்தில் மாணவி ஒருவரால் விடப்பட்ட புதிய "லுமாலா" இன சைக்கிள் ஒன்று கடந்த திங்கள் திருடப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுசம்பவம் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலேயே நடைபெற்றது.

இதுபற்றி பாடசாலை அதிபர் விளக்கமளிக்கையில்காலை மாணவி ஒருவர் பாதுகாப்பு நிலையத்தில் விட்டு பூட்டிவிட்ட சைக்கிள் திருடப்பட்டுள்ளதாகவும் இது பின்பகுதி உயரமதிலால் ஏறிக்குதித்து திருடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக தமிழீழ காவல்துறையில் புகாரிடப்பட்டது ஸ்தலத்திற்குவிரைந்த காவல்துறையினர் இதுதொடர்பாக விசாரணையை மேற்கொண்டனர்.

---

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப்

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 சனவரி 29 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்

அ) சதுரங்க ஆட்ட / தற்காப்பு/உதைபந்தாட்ட இடைவரவுப் போதனாசிரியர்.

ஆ) கிளிநொச்சி விவசாய பீடம்- இடைவரவு உடற்கல்வி போதனாசிரியர்.

கொடுப்பனவு விகிதம்.

மணித்தியாலமொன்றுக்கு 75/ ரூபா.
மாதமொன்றுக்கான உச்ச அளவு 900/- ரூபா]

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் நிதிக்கிளையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23x10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க/ திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலிருந்துஅனுப்பப்படும்விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992. 12. 29

(சி/5728)

யாழ்ப்பாணம்

# பாபர் மசூதியில் அரசியல் சூதாட்டம்

**சுகிர்தா**




இந்தியாவின் கொழுந்து விட்டெரியும் ஒரு மிகப்பெரிய பிரச்சினை முடிவுக்கு வந்திருப்பதாகவே தோன்றுகின்றது இந்த ''ராமஜென்ம பூமி-பாபர் மசூதி'' பிரச்சினையின் மூலம் நரசிம்மராவ் இறுதி வெற்றி பெற முனைந்திருக்கிறார்.

சமீபகாலங்களில் இந்தியாவின் மூன்று மத்திய அரசுகள் இப்பிரச்சினையின்கனபரிமான அளவுகளில் சிக்குண்டு தமது ஆட்சியை இழந்திருக்கின்றன. 1989 இல் ராஜீவ் அரசும், 1990 இல் வி.பி.சிங்தலைமையிலான அரசும், 1991 இல் சந்திரசேகர் தலைமையிலான அரசுகளுமே யாகும். இந்த அரசுகள் ஆட்சியை இழந்தது மட்டுமல்ல பாரதீய ஜனதாக் கட்சியின் புயல் போன்ற வளர்ச்சிக்கும் இப்பிரச்சினையே காரணமாயிருந்தது.

இந்தியா 83 வீதம் இந்துக்களையும் 11 வீதம் முஸ்லிம்களையும்கொண்ட நாடு. இந்துக்கள்பெருமளவிலிருந்தும் அதாவது 3/4 பங்கிற்கு மேல்)'மதச்சார்பின்மையை' பின்பற்றும் நாடு. இந்தியா சுதந்திரமடைந்த காலந்தொட்டு இம் ''மதச்சார்பின்மை'' கொள்கையைக் கடைப்பிடிக்க பல ''உயர்ந்த விலைகளைச்'' செலுத்திவந்திருக்கிறது. இந்தியாவின் 'தேசியத்தந்தை' மகாத்மா காந்தி இந்து அடிப்படைவாதிகளினாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

காங்கிரஸ் கட்சி; சுதந்திரத்திற்காக போராடிய காரணத்தினாலும், பெருமளவு இந்து மதசார்பு நிலையைப் பெற்றிருந்தமையாலும் இந்திய மக்களினால் அங்கீகரிக்கப்பட்டகட்சியாகி பின்னர் நேரு பாரம்பரியத்தினால் (சிலசமயம்அனுதாப அலைகளினால்) மிகச் சிறிய காலந்தவிர இன்றுவரை ஆட்சியிலுள்ளதாகும். ஆனால் இந்துமத அடிப்படை வாதிகளான ஆர். எஸ். எஸ். விஷ்வ ஹிந்துபரிஷத்போன்ற அமைப்புக்களிலிருந்து தோற்றம் பெற்ற பாரதீய ஜனதாக்கட்சி சமீபகாலங்களில் பெரும் வளர்ச்சியடைந்து வருகின்றது.

நேரு, இந்திரா, ராஜீவ்ஆகியோரின் சொந்தமாநிலமாக உத்தரப்பிரதேசம் இருந்த போதிலும், காங்கிரஸ் கட்சிக் கோட்டையாக கருதப்பட்ட போதிலும். இப் பாபர்மசூதிப் பிரச்சினையால் பாரதீய ஜனதா இம்மாநில ஆட்சியை தன்வசம்பெற்றுக்கொண்டது.

வேலையின்மை பொருளாதார நெருக்கடிநிர்வாகத் திறமையின்மை போன்ற மோசமான அணுகுமுறையை பாரதீய ஜனதாக்கட்சி கொண்டிருந்த போதிலும்மக்களவற்றை கருத்திற் கொள்ளாமல் பாபர் மசூதிப்பிரச்சினைக்கு முதலிடம் கொடுத்து வந்தனர். பாரதீய ஜனதாக் கட்சியும் தனது முக்கிய தேர்தல் வாக்குறுதியாக பாபர் மசூதி விடயத்தையே குறிப்பிட்டு வந்தது.

பாபர் மசூதி இருக்கும்வரை பாரதீய ஜனதாக்கட்சி இதை மையமாக வைத்து ஒருகட்டத்தில் இந்திய மத்திய அரசை கைப்பற்றக்கூடிய அளவிற்கு வளரக்கூடு மென்பதையும் காங்கிரஸ் கட்சி, குறிப்பாக நரசிம்மராவ் கணிப்பிட்டேயிருந்தார்பிரச்சினைகளைஆறப் போடுவதையே தன்னுடைய ராஜதந்திரமாகக் கொண்ட நரசிம்மராவின் போக்கு பாரதீய ஜனதாக்கட்சியை பொறுமையிழக்கச் செய்தது.

டிசம்பர் 6இப்பிரச்சினைக்கு முடிவு திகதியாக இவ் இந்து மத அடிப்படைவாதிகள் தெரிவித்திருந்தனர். டிசம்பர் 6 இற்கு முன் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படாவிடின் நாம் 'கரசேவை'-யாத்திரை ஆரம்பித்துராமர் கோயிலை பாபர் மசூதிஇருக்குமிடத்தில் கட்டப் போவதாக சூளுரைத்திருந்தனர். நரசிம்மராவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உத்தரப்பிரதேச அரசு உச்ச நீதிமன்றத்திற்கு கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றும் என்றநம்பிக்கையில் நாம் எவ்விதநடவடிக்கையும் எடுக்காமலிருந்ததாக கூறுகிறார்.

பாரதீய ஜனதாக்கட்சி நடத்தும் இக்கரசேவையை பாரதீய ஜனதாக்கட்சிஅரசே தடுத்து நிறுத்துமெனத் தாம் நம்பியதாக நரசிம்மராவ்கூறுவது வேடிக்கையானதாகும். பாபர் மசூதியை இடிக்கத் தொடங்கி ஏழு மணித்தியாலங்களுக்கு பின்னரே உத்தரப்பிரதேச அரசு கலைக்கப்பட்டதும் பரா மிலிட்டரித் துருப்புக்கள் பாபர் மசூதி வளாகத்திற்கு அனுப்பப்பட்டதும் நடைபெற்றிருக்கிறது. இவ் ஏழு மணித்தியால அவகாசத்தை கரசேவை நடத்தியவர்களுக்கு வழங்கியது ஏன்? தற்செயலாக உத்தரப் பிரதேச அரசு இக்கரசேவையை தடுக்காது விட்டால் மத்திய அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த நடவடிக்கை என்ன? இவ் பாபர் மசூதி இடிக்கப்பட்டால் மிகப்பெரிய இரத்த ஆறு ஓடுமென்பதை நரசிம்மராவால் அனுமானிக்க முடியாமலிருந்ததா?

பாபர் மசூதியின் முடிவின் மூலம் பாரதீய ஜனதாக்கட்சியின் வளர்ச்சிக்கு முடிவை ஏற்படுத்த மத்திய அரசு பாரதீய ஜனதாக்கட்சிக்கு ஒத்துழைத்ததென்பதை புரிந்து கொள்ளலாம்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டு மூன்று தினங்களின் பின் பாரதீய ஜனதாக்கட்சியின் முதுகெலும்பான ஆர். எஸ். எஸ் விஷ்வ ஹிந்து பரிஷத் பஜ்ரங்தள் ஆகியன தடைசெய்யப்பட்டதையும் ஆறு நாட்களின்பின் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியிலிருந்த மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், இமாசல் பிரதேசம் ஆகிய மாநில அரசுகள் கலைக்கப் பட்டதையும் நாம் பாரதீய ஜனதாக்கட்சியின் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே கொள்ளலாம்.

இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரை பாபர் மசூதியைக் காப்பாற்ற நினைத்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம். முன்னரே எதற்கும் தயாராக ஒரு பரா மிலிட்டரிப்பிரிவு இதன் அருகே முகாமிட்டிருந்தால் உத்தரப்பிரதேச அரசு தன்னை ஏமாற்றி விட்டதென்றுபுலம்பிக்கொண்டிருக்க தேவையில்லாமல் இருந்திருக்கும்.

கி. பி 1528 இல் பாபர் மன்னனரால் கட்டப்பட்ட மசூதிஇடிக்கப்பட்டால் இதை எந்தவொரு முஸ்லிமாலும் ஏற்றுக் கொள்ள முடியாமல் கலவரத்தில் ஈடுபடுவார்களென்பதையும்அந்தக்கலவரங்களுக்கும் பாரதீய ஜனதாவே பொறுப்பேற்க செய்ய முடிவதிலிருந்து பாரதீய ஜனதாவிற்குச் சாவுமணி அடிக்க நரசிம்மராவால் விரித்தவலையினுள் பாரதீய ஜனதாக் கட்சி சிக்கிக் கொண்டதென்பதே உண்மையாகும்.

தற்போதுஇந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் அயோத்தியில் மசூதி கட்ட காலவரம்பு நிர்ணயிக்க முடியாதென தெரிவித்திருப்பது இதை மேலும் உறுதிப்படுத்துகிறது. காலதாமதத்தின் பின் சமரச முயற்சியாக இராமஜென்மபூமி வளாகத்திற்கு வெளியே பாபர் மசூதி (நரசிம்மராவ் மசூதி) அமைப்பதாக உடன்பாடு காணப்படலாம். என்பதையே பெரும்பான்மை அரசியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் இந்து மக்களுக்கு கரசேவை மூலம் தாபிக்கப்பட்ட இராமர் கோவிலில் வழிபட அனுமதி கொடுத்திருப்பதும் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குமென்பதால் சர்ச்சைக்குட்பட்ட இடத்தில் தொழுகை நடாத்த அனுமதிக்கும் படி நெருக்குதல் செய்ய வேண்டாமென முஸ்லிம் தலைவர்களிடையே இந்திய உள்துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்ததையும் இதையும்மீறி தொழுகை செய்ய வந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்களை அடித்து துரத்தியதையும் கண்டு இந்திய அரசின் நோக்கை புரிந்து கொள்ளலாம்.

இந்தியாவில் பத்துக் கோடி முஸ்லிம்கள் வாழ்கின்ற போதிலும் கஷ்மீர் மாத்திரந்தான் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலம். அங்கு தேர்தல் நடந்தால் இருபது உறுப்பினர்களே தெரிந்தெடுக்கப்படுவர். மேலும் இநதியா முழுவதிலும் முஸ்லிம்களால் தீர்மானிக்கப்படும் தொகுதிகள் ஐம்பதுக்கு குறைவாக இருக்கின்றதே தவிர முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள தெர்குதிகள் மிக மிக குறைவே! இவ்வாறு சிதறி வாழ்வதால் அரசியல் ரீதியில் முக்கியமற்றவர்களாக கருதப்படுவதால் அரசியல் பகடைக் காய்களாகியிருக்கின்றனர்.

எவ்வாறாயினும் ''ராஜதந்திரங்கள் வரையறைக்குட்பட்டன'' என்றதற்கேற்ப நரசிம்மராவின் கணிப்புஆரம்பத்தில் அவருக்கு வெற்றியை பெற்றுத்தந்த போதிலும் நாட்கள் செல்ல தோல்வியையே பெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நரசிம்மராவின் செயற்பாட்டை ஆழ்ந்து நோக்குமிடத்து, உத்திரப்பிரதேச அரசை கலைத்ததை ஏற்றுக் கொண்டாலும், மத்திய பிரதேசம் ராஜஸ்தான், இமாலயப் பிரதேஷ் போன்ற அரசுகள் கலைக்கப்பட்டது ஜனநாயக படுகொலையாகவே கருதப்படுகிறது. கட்சிக்குள் அர்ஜுன்சிங், சரத்பவார் போன்றவர்களின் நெருக்குதலாலேயே இவ்வரசுகள் கலைக்கப்பட்டன. நாட்டில் ஜனநாயகமா? அல்லது கட்சியின் தலைமைத்துவமா? என்ற கேள்விக்கு விடையாக கட்சியின் தலைமைத்துவத்தைத் தெரிந்தெடுத்து ஜனநாயகத்தை புறக்கணித்தவர் என்ற பெயரிற்கு உள்ளாகியுள்ளார் நரசிம்மராவ்.

எவ்வாறாயினும் இப்பிரச்சினையில் நரசிம்மராவ் ஓர் பெரும் அரசியற் சூதாட்டம் ஆடுகிறார் என்பது மட்டும் தெளிவு.

---

### போராட

தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

எமது போராட்டத்தை முறியடிக்க திட்டமிட்டுமேற் கொள்ளும் பொருளாதார தடைக்கு பொது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கேட்டுள்ளது.

இப்போராட்டத்திற்கு வர்த்தகர்கள் யாவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி வெகுஜன பேரணியில் கலந்து கொள்ள வேண்டும் என வட பிராந்திய வர்த்தகர் சங்கங்களின சமாஜம் கேட்டுள்ளது.

தீவக கூட்டுறவாளர் பேரணியில் சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. தீவக நலன்காக்கும் கழகத்தின் தொண்டர்கள் உழைப்பாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (பா) (88) (22)

### கடலில்

டுக்கு இலக்காகி என்ஜின் சேதமடைந்தது நாங்கள் எடுத்துச் சென்ற டீசல்பரல் துவாரமடைந்து டீசல் கடலில்வீணாகியது.

கரையை சேர முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில் எம்மைத் தேடி வந்த உறவினர்களின் படகுகள் மூலம்கரையைவந்தடைந்தோம் என்றார்.

மற்றும் பொலிகண்டியில் மணிவண்ணன் என்பவர் பலமாகத் தாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை துறைமுகப் பகுதியில் நின்ற மூன்று இழுவைப் படகுகளையும் கடற்படையினர் பல தடவைகள் சுற்றிச் சுற்றிச் சுட்டனர். மேலும் பலரது வலைகள் வள்ளங்கள் சேதமடைந்தன. கடலில் மீனவர்கள் வைத்திருந்த மீன்களையும் கடற்படையினர் கடலில்வீசியதால் நேற்று மீனவர்களது சுயதொழில் பாதிப்படைந்தது. (யோ)

### அழுகிய

றுக் கொள்ள முடியவில்லை. கடற்படையினரின் மேற்படி தாக்குதலில் சுமார் 28 பேரது சடலங்கள் இதுவரை மீட்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளாலிக்கடற் கரையோரமாக மேலும் ஐந்து சடலங்கள் கரையொதுங்கியதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. [க]

### பகலில்

இவை வட்டுக்கோட்டை, மூளாய், சுழிபுரம், சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, சங்கானை பகுதிகளை அண்டி வீழ்ந்து வெடித்தன. இவ் எறிகணைகளால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

இத் தாக்குதலினால் அச்சமடைந்த மக்கள் இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### கூட்டுபடை

மேல் மட்டத்தில் கடுமையான கட்டுப்பாட்டை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்கள் என்று அக்கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சிச் செயலாளர் சிறிசேனா கூரேயும், ஜனாதிபதி வழக்கறிஞர் கே. என். சொஸ்கியும் இவ்வாறு ஆலோசனை வழங்கியிருப்பதாக எழுதும் அவர், கூட்டுப்படை தலைமையகக் கட்டுப்பாட்டின் கீழ் முப்படைத் தளபதிகளையும்வைத்திராமல் சம அந்தஸ்துள்ள இரு அமைப்புகளை ஏற்படுத்தி முப்படைத் தளபதிகளையும், கூட்டுப்படைத் தலைமையையும் செயற்படவைக்கும் திட்டம் ஒன்றையும் இருவரும் சமர்ப்பித்திருப்பதாக கூறுகிறார்.

அந்தக் கட்டுரையில்-

வடக்கு - கிழக்கு யுத்த முனையில் யுத்தத்தை நடத்துவதற்கு அடிப்படைத் தேவையாக 80,000 படைகள் தேவை என்று ஒரு அந்தரங்கமான மதிப்பீட்டை அப்போது லெப். ஜெனரல் வணசிங்கா அரசுக்கு அளித்திருந்தார் என்றும்.

ஆனால், இன்றும் கூட வடக்கிலும், கிழக்கிலும் இராணுவத்தின் தொகை இந்த எண்ணிக்கையை எட்டவில்லை. லெப். ஜெனரல் வணசிங்கா தனது அறிக்கையைச் சமர்பித்த வேளையில் இருந்த தளநிலைமை வேறு இப்போதுள்ள தளநிலைமை வேறு. இன்று படை வீரர்களும், அதிகாரிகளும் இழப்புகளைச் சந்திக்கும் அளவில் அன்று இழப்புகள் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடுகிறார்,

---

## பிரேமா டாக்கா செல்வார்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எதிர்வரும் 18 ஆம் திகதி டாக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

# ஜே. ஆர். உட்பட அமைச்சர்கள் வங்கியில் மோசடி புரிந்தனர்

## 'ராவய' குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரபல அரசியல்வாதிகள் மற்றும் பிரமுகர்கள் நட்ட ஈடு என்ற போர்வையிலும், வங்கிகளை ஏமாற்றியும், பெருந்தொகையான அளவில் பொது மக்களின் பணத்தைச் சுரண்டிச் சேமித்து இருப்பது தெரிய வந்திருப்பதாக 'ராவய' செய்தி வெளியிட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்த இம் மோசடிகள் மூலம் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, முன்னாள் அமைச்சர் ரொனி டி. மெல், அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ போன்றோர் சம்பந்தப்பட்டிருப்பினும் இவர்களால் மோசடி செய்யப்பட்ட தொகை சரிவரத் தெரியவரவில்லை. மேலும் இத்தகைய மோசடிகள் மூலம் அமைச்சர்களான பி எம். பி சிறில் 30,85 000 ரூபாவும் எம்.எஸ். அமரசிறி 11,35.000 ரூபாவும், ஈ எல்.பி. ஹருள்ளே 5,00 000 ரூபாவும், மகேந்திர விஜயரட்ணா 5.00.000 ரூபாவும், ரஞ்சித் அத்தபத்து 3,00,000 ரூபாவும், மகிந்த விஜேசேகர 3,45,000 ரூபாவும், சுரண்டிச் சேகரித்திருப்பதாகவும் இவர்கள் உட்பட மேலும் முப்பதாறு பேர் இம் மோசடிகளில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## 'குமாரி' யாழ். வர பத்து நாட்கள் ஆகும்

''குமாரி'' என்ற கப்பல் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைய சுமார் பத்து நாட்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை ''குமண'' என்ற கப்பல் திருக்கோணமலையில் இருந்து சுமார் 3000 மெற்றிக்தொன் மாவை ஏற்றிக் கொண்டு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மீட்புநிதி சேகரிப்பு

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறிய வசதிபடைத்தோர் (சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களும்) நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் இன்றும் நாளையும் மாலை 3.00 மணி தொடக்கம் 3 30 மணிவரையும், நாளை மறுதினம் காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையும் தமது மீட்பு நிதியைச் செலுத்தலாம் என தமிழீழ மீட்புநிதி பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

## ஆயர் தெரிவு

(கொழும்பு)

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் தெரிவு நாளை ஒன்பதாம் திகதியன்று வட்டுக்கோட்டையில் இருக்கும் யாழ்ப்பாண கல்லூரியில் ஒஹியோ மண்டபத்தில் நடைபெறும் என்று தெரியவருகிறது தற்போது இப்பதவியை வகித்து வரும் அதி வண. டி. ஜே அம்பலவாணர் விரைவில் ஓய்வு பெற இருப்பது தெரிந்ததே.

## அங்கிலிக்கன் ஆயர்

யாழ். ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகையையும் மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து யாழ் குடாநாட்டின் தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிவதுடன் நேரில் பல இடங்களுக்கும் சென்று பார்வையிடுவார் எனவும் தெரியவருகிறது. அத்துடன் திருச்சபை ஆலயங்களில் நடைபெறும் பல்வேறு சமய வைபவங்களிலும் கலந்து கொள்வார் எனவும் தெரிகிறது.

ஆனால் அவர் கடலைக் கடந்து பிரயாணம் செய்ய மாட்டார் எனவும் கொழும்பு திருச்சபையினர் தெரிவித்துள்ளனர்.

இவர் யாழ். திருச்சபை ஆயரை தெரிவு செய்யும் பணிக்காகவும் யாழ்ப்பாணம் செல்ல எண்ணியதால் கடலைக் கடக்கக் கூடும் என வேறொரு செய்தி தெரிவிக்கிறது.

## சைவசித்தாந்தம் அமர்வு இரண்டு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கும் சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் இரண்டாவது அமர்வு நாளை காலை 9 மணிக்கு கைலாசபதி அரங்கில் இடம்பெறும். அமர்வுக்குப் பேராசிரியர் வி. சிவசாமி தலைமை வகிப்பார்.

## பல்கலைக்கழக

வீதமாகும். முன்னைய வருடங்களைவிட இது 5 முதல் 6 வீதம் அதிகமாகும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்.

வழமையாகப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுபவர்கள் சராசரி 31 முதல் 35 வீதமாகும். சென்ற வருடத்தைவிட இந்த வருடத்தில் 4ஏ பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவென்றாலும் மொத்தப் பெறுபேறுகள் மிக நன்றாக உள்ளதாக ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்.

மருத்துவம் படிப்பிற்கு 3,576 ஆண்களும், 4 261 பெண்களும் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

கலை, வர்த்தக துறைகளிலும் ஆண்களைவிடப் பெண்களே பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ளார்கள். கலைத்துறைக்கு 8,731 ஆண்களும், 17,612 பெண்களும் தகைமை பெற்றுள்ளார்கள். வர்த்தக கற்கை நெறிக்கு 8,962 பெண்களும், 8,731 ஆண்களும் அனுமதிக்கான தகைமை பெற்றுள்ளனர்.

பௌதிக விஞ்ஞானம், பொறியியல் துறைகளில் மாத்திரம் ஆண்கள் பெண்களைவிட முன்நிற்கிறார்கள். இந்த ஆண்டு 2.927 ஆண்களும், 831 பெண்களும் பொறியியல்துறை அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ளார்கள்.

இதேவேளை விடைத்தாள்களை மறுபரிசீலனை செய்யும் இறுதி நாள் ஜனவரி 25 என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டி

விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் 11 பேர் கொண்ட மாபெரும் காட்சி உதைபந்தாட்டமொன்று மல்லாகம் சிறீபாஸ்கரன் விளையாட்டரங்கில் இன்று மாலை மூன்று மணியளவில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் காங்கேசன்துறை யங்றோயல் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா கழகமும், நாவாந்துறை சென் மேரீஸ் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் கழகமும் விளையாட உள்ளன.

## மாதாந்த கூட்டம்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுச் சபையின் மாதாந்தக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு ப. 10 மணிக்குத் தமிழீழக் கல்விக்கழகப் பணிமனையில் நடைபெறவிருப்பதால் சகலரையும் கலந்து கொள்ளும்படி செயலாளர் கேட்டுள்ளார்.

## பேரணி அமைப்பு கூட்டம்

எதிர்வரும் திங்கட்கிழமை நடாத்தப்படவுள்ள வெகுஜன ஆர்ப்பாட்ட பேரணியில் வடமராட்சிக் கோட்டத்தில் உள்ள வெகுஜன அமைப்புக்களை கலந்து கொள்ளச் செய்யும் பொருட்டு வெகுஜன அமைப்புக்களின் தலைவர், செயலாளர்களைக் உள்ளடக்கிய கூட்டம் ஒன்று இன்று பி ப 4 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. சகல அமைப்புக்களின் தலைவர், செயலாளர்களையும், மதத்தாபனங்களின் மதகுருமார்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சிக் கோட்ட வெகுஜன அமைப்புக் குழு கேட்டுள்ளது.

## விசேட சிகிச்சை பெற செல்வோர் கவனத்திற்கு

விசேட சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்குச் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களை எதிர்வரும் திங்கள் செவ்வாய்க் கிழமைகளில் யாழ். வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சிபார்சுக் கடிதம், தேசிய அடையாள அட்டை போன்றவற்றுடன் மேற்படி தினங்களில் காலை வேளையில் சமுகம் தருமாறு பணிப்பாளர் தெரிவிக்கிறார். [21]

## ஆங்கில ஆசிரியர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சகல பகுதிநேர, முழுநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் யாழ்ப்பாணம், வேலணைக் கோட்டத்தினருக்கு இன்று யாழ். இந்துமகளிர் கல்லூரியிலும், மருதனார்மடக்கோட்டத்தினருக்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் கல்லூரியிலும், சாவகச்சேரி கோட்டத்தினருக்கு 12-ம் திகதி சாவகச்சேரி பெண்கள் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்விக்கோட்ட மாணவர் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ''அபிவிருத்தித் திட்டம்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துமகளிர் கல்லூரியில் தீவகக் கோட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி பொ. கலைமதி தலைமையில் நடைபெறவுள்ளது.

## மீனவர் மீது கலிபர் தாக்கு

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா கடற்படையினர் நேற்று முன்தினமிரவு அராலிப் பகுதி மீனவர்கள் மீது கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் படகுகளில் சென்ற மீனவர்கள் படகுகளை கைவிட்டு நீந்திக் கரைவந்து சேர்ந்துள்ளனர்.

இதேவேளை படையினர் ஐந்துக்கும் மேற்பட்ட 'பரா' வெளிச்சத்தை ஏவியவண்ணம் தொடர்ச்சியான வேட்டுக்களையும் தீர்த்தனர். [05]


### ஹற்றன் நஷனல் வங்கியின்

அனுசரணையுடன் நடைபெறும்

### மாபெரும் கூடைப்பந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்ட முன்னணிக் கழகங்கள், பாடசாலைகள் பங்குபற்றும் மாபெரும் கூடைப்பந்தாட்டப் போட்டி.

இடம்: யாழ். பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அரங்கு

காலம்: இன்று 8-ம் திகதி முதல், 11ஆம 19ஆம் 22ஆம் திகதிகள் தவிர்ந்த, ஏனைய நாட்களில் தினமும் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இறுதிப் போட்டி 23.01.93

பங்கு பற்றும் குழுக்கள்

1. யாழ். பல்கலைக்கழகம்
2. புனித சம்பத்திரிசியர் கல்லூரி
3. யாழ். மத்திய கல்லூரி
4. யாழ்ப்பாணக் கல்லூரி
5. சென் ஜோன்ஸ் கல்லூரி
6. சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
7. ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்
8. ஷப்றா விளையாட்டுக் கழகம்
9. பற்றிஷியன்ஸ் விளையாட்டுக் கழகம்
10. பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

HATTON NATIONAL BANK HNB LIMITED

ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளிகள்

(சி-5735)


## மரண அறிவித்தல்

### நடராசா இராசலிங்கம் (கிளி)

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் மேற்கில் வசித்தவருமாகிய நடராஜா இராசலிங்கம் (கிளி) 2-01-93-ல் கௌலிக் கடலில் இடம்பெற்ற தாக்குதலில் அகாலமரணமானார். இவர் நடராசா தங்கம்மாவின் அன்பு மகனும், தயாநிதியின் அன்புக் கணவரும், தர்ஷினி, தரணிகரன், தர்சிகா, தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நல்லையா இராசதுரை, பரமலிங்கம், காலஞ்சென்ற குகதாஸ், சிங்கராசா, மனோன்மணி, சிவமணி, காலஞ்சென்ற பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகம்-கனகம்மாவின் அன்பு மருமகனும், தயானந்தன் (சவுதி), கலாநிதி, வசந்தநிதி, சாந்தநிதி, வவானந்தன், இன்பநிதி, சதானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் தகனக் கிரியை பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;

கேணியடி, கொக்குவில் மேற்கு, (3957)

க. சண்முகம் (மாமனார்)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

07.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7565

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-8138, 27-7274, 42-8316, 28-3476, 28 0429, 27-9707, 24-4481, 24-6480, 26-5560, 26-2827, 28-3306, 24-4457, 25-6085, 37-1739, 24-9744, 27-5845, 26-3812, 26-4436, 27-1637, 26-3582, 42-9345, 24-6759, 26-6842, 42-3267, 26-1495, 26-1745, 27-6704, 26-0594, 25-7762, 27-5077, 26-1376, 28-3289.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-5955, 24 9609, 24-7628, 24-5967, 24-5127, 42-9112, 28-9927, 28-2587, 28-1712, 27-0991, 43-1019, 26-1169, 26-4691, 22-3611, 22-5622 28-8589, 27-5197.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.